# உலகம் சுற்றும் தமிழன்

★

ஸ்ரீ. ஏ. கே. செட்டியார்

★

சக்தி காரியாலயம்
52, அரமனைக்காரத் தெரு, சென்னை.

பதிப்புரிமை] ஏப்ரல் 1940 [விலை அணா 12

முதற் பதிப்பு - விக்கிரம, சித்திரை

சக்தி பிரஸ் லிமிடெட் (சாந்தி பிரஸ்), சென்னை.

# பதிப்புரை

சக்தி மலர் இரண்டாவதாக வெளிவந்திருக்கும் 'உலகம் சுற்றும் தமிழன்' என்னும் இந்நூல் காந்தியடிகளின் சரிதத்தைத் திரைப்படமாக எடுக்கும் சென்னை டாகுமெண்டரி பிலிம்ஸின் மானேஜிங் டைரெக்டரான ஸ்ரீ ஏ. கே. செட்டியார் மேல் நாட்டுப் பிரயாணம் செய்து வருகையில் அவ்வப்பொழுது பல பத்திரிகைகட்கு எழுதிய கட்டுரைகளின் தொகுப்பாகும்.

இக்கட்டுரைகளை வெளியிட அனுமதியளித்த 'சக்தி', 'ஹிந்துஸ்தான்' 'ஜோதி', 'ஆனந்த விகடன்', 'தினமணி', 'ஹனுமான்' ஆகிய பத்திரிகை உரிமையாளர்கட்கு எமது நன்றி உரித்தாகுக.

இப் புத்தகத்தைத் தமிழ் மக்கள் ஆதரித்து இம்மாதிரி இன்னும் பல நூல்கள் வெளியிட எங்களை ஊக்க வேண்டுகிறோம்.

★

சக்தி காரியாலயத்தார்

இந்நூலிலுள்ள கட்டுரைகள் இன்னின்ன
பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்ட
தேன்பதை விளக்கும்

# குறிப்பு

1. உலகமெங்கும் ஒலிக்கும் பெயர்
2. கவிஞர் நோகுச்சி
   —"ஜோதி" *செப்டம்பர்*, 1937.
3. ஹாவாய்த் தீவுகள்
   —"ஜோதி" *ஆகஸ்டு*, 1937.
4. அமெரிக்காவில்
   —"ஹனுமான் ஆண்டுமலர்" 1938.
5. சிவப்பு இந்தியர்கள்
   —"ஜோதி" *அக்டோபர்*, 1937.
6. அயர்லாந்தில் மூன்று நாட்கள்
   —"ஜோதி" *டிஸம்பர்*, 1937.
7. பின்லந்தில்
   —"சக்தி" *மார்கழி, பிரமாதி.*
8. ஜெர்மனியில் ஓர் தமிழ்ப் புலவர்
   —"ஜோதி" *பிப்ரவரி*, 1938.
9. பிராஹா
   —"ஆனந்த விகடன் தீபாவளி மலர்" 23—10—1938.
10. பொருட்காட்சிக்குத் தக்க மாளிகை
    —"ஹிந்துஸ்தான்" 14—1—40.
11. வெனிஸ்
    —"சக்தி" *ஐப்பசி, பிரமாதி.*
12. ரோமாபுரி
    —"சக்தி" *கார்த்திகை, பிரமாதி.*
13. தென்னாப்பிரிக்காவில்
    —"தினமணி" 1939 *வருஷ மலர்.*

# உலகம் சுற்றும் தமிழன்

5989
21 APR 1982

## 1. உலகமெங்கும் ஒலிக்கும் பெயர் !

ஜப்பானில், ஓவ்ணா என்னும் சிறிய ரயில்வே ஸ்டேஷனில் ரயிலுக்காகக் காத்துக்கொண்டு நின்றேன். முன்பின் அறியாத இரண்டு ஜப்பானிய வாலிபர்கள் வேகமாக வந்தனர். அவர்களில் ஒருவன் என் கையைப் பிடித்துக் குலுக்கி, "நீங்கள் காந்தியின் நாட்டிலிருந்து வந்தவர்தானே?" என்றான். "ஆம்" எனத் தலையசைத்தேன். "உலகத்தில் காந்தியடிகளைப் போன்ற மனிதர் யாரும் கிடையாது. ஜப்பானில் எத்தனையோ வீரர்கள் பிறந்திருக்கிறார்கள்; சக்கரவர்த்திகள் பிறந்திருக்கிறார்கள். ஆனால் காந்தியடிகள் போன்ற சிறந்த மனிதர்கள் பிறந்ததேயில்லை" என்றான். சக்கரவர்த்தியையே கண்கண்ட தெய்வமாகக் கொண்டாடும் ஜப்பானியர்கள் காந்தியடிகளைப் பாராட்டுவதைக் கண்டு ஆச்சரியமடைந்தேன்.

* * *

**தாக்கா வக்கா** என்பவர் ஜப்பான் பார்லிமெண்டு மெம்பர். சில வருஷ காலம் இவர் கல்கத்தாவில் இருந்தாராம். இந்தியாவைப் பற்றியும் காந்தியடிகளைப்

பற்றியும் இவர் இரண்டு புத்தகங்கள் எழுதியுள்ளார். ஜப்பானிலுள்ள காங்கிரஸ் தலைவர் திரு. ஆனந்த மோகன்ஷகாய் மூலம் இவருடைய அறிமுகம் எனக்குக் கிடைத்தது. ஒருநாள் இவரில்லம் சென்றேன். இந்திய முறைப்படி நமஸ்காரம் செய்து வரவேற்றார். இவர் வீட்டிலே காந்தியடிகளின் உருவச் சிலை, சர்க்கா முதலியன காட்சியளித்தன.

* * *

டோகியோவில் ஒரு சினிமாக் கொட்டகைக்குச் சென்றபொழுது, அங்கு உட்கார இடமில்லாது நின்று கொண்டிருந்தேன். அப்பொழுது வெளியிற் செல்ல எண்ணிய ஒரு சீனப் பெண், "ஹலோ! இங்கே உட்காருங்கள். காந்திஜீ சௌக்கியமா?" என்றாள்.

* * *

வெடிகுண்டுகளால் இப்பொழுது நாசமடைந்துள்ள ஷாங்காய் நகரம் நன்றாக இருந்தபொழுது அங்குச் சென்றிருந்தேன். ஒருநாள் சீனர்கள் வசிக்கும் இடத்திற்குச் சென்றேன். அங்கே காந்தியடிகளின் பெரிய உருவப் படம் தென்பட்டது. உலகின் உள்ளங் கவர் உருவம்! சீனச் சித்திரகாரன் திறமை! "விலை என்ன?" என்று கேட்டேன். அவனுக்கு ஆங்கிலம் தெரியாது, எனக்குச் சீனம் தெரியாது. மனித பாஷை—சைகைதான். கடைசியாகப் பதினொரு ரூபாய்க்கு அப்படத்தை விலைக்கு வாங்கினேன்.

* * *

கொரியா மாணவர்கள் கூட்டத்தில் பிரசங்கம் செய்துகொண்டிருந்த பொழுது, "காந்தியடிகள்

அமெரிக்காவுக்குச் செல்லநேர்ந்தால், ஜப்பானுக்கும் கொரியாவுக்கும் வரக்கூடும்" என்றேன். நீங்கள் நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி; அங்கிருந்த கொரியா மாணவன் ஒருவன் கூட்டத்தில் என்னைக் கட்டிப்பிடித்துக் கொண்டு ஆனந்தக் கூத்தாடினான்.

*  *  *

பஸிபிக் மகா சமுத்திரத்தின் மத்தியிலுள்ள அழகிய ஹாவாய்த் தீவில் ஹில்லோ என்னும் நகரத்துக்குச் சென்றேன். "உண்மை இந்தியனை"ப் பார்க்க எல்லோரும் ஆச்சரியமடைந்தனர். அன்றைய தினம் **ஹில்லோ டிரிபியூன்** பத்திரிகையின் முதற் பக்கத்தில் காந்தியடிகள் நாட்டிலிருந்து ஒரு பத்திரிகைக்காரர் ஹில்லோவுக்கு வந்திருக்கிறார் என்று பெரிய எழுத்துக்களில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

*  *  *

அமெரிக்காவில், நியூயார்க் நகரத்தில் ரேடியோவில் பேசும் வாய்ப்புக் கிடைத்தது. **கரண்ட் ஹிஸ்டரி** (Current History) பத்திரிகை ஆசிரியர் கேள்விகள் கேட்டார். முதலாவது கேள்வி என்ன தெரியுமா? "காந்தியடிகள் தீண்டாதாருக்குச் செய்த நன்மைகள் என்ன?" என்பதுதான்.

*  *  *

வருடந்தோறும் அமெரிக்காவில் காந்தியடிகளின் பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறார்கள். அன்று பல அமெரிக்கர்கள் காந்தி குல்லா அணிகின்றனர். காந்தியடிகள் எளிய வாழ்க்கை வாழலாம்.

ஆனால், அமெரிக்காவில் காந்தியடிகள் பிறந்த நாள் விருந்துக்கு ஒவ்வொருவருக்கும் 21 ரூபாய்!

* * *

நியூயார்க் நகரத்தில் ஒரு ஐ. ஸி. எஸ்., ஒரு ஹைகோர்ட் ஜட்ஜ், ஒரு லெப்டினெண்ட் கர்னல் ஆகிய மூன்று இந்தியர்கள் ஒரு கூட்டத்தில் பிரசங்கம் செய்தனர். எதைப்பற்றி? காந்தியடிகளின் புகழைப்பற்றி! இல்லையேல் இந்தப் பிரசங்கியார்களுக்கு மதிப்பேது?

* * *

பிராங்ஸ்வில் என்பது அமெரிக்காவில் பெரிய பணக்காரர்கள் வசிக்குமிடம். அங்குப் பெண்கள் பள்ளிக்கூடமொன்றில் இந்தியாவைப் பற்றிய கேள்விகளுக்குப் பதில் சொல்லுவதாகக் கூறிச் சென்றேன். 14 முதல் 20 வயது வரையுள்ள சுமார் 15 பெண்கள். அத்தனை பேரும் சேலையணிந்து ஜமுக்காளத்தில் உட்கார்ந்திருந்தனர். காந்தியடிகளின் பெரிய உருவப்படமும், தேசீயக் கொடியும், சர்க்காவும் அங்குக் காணப்பட்டன. அன்றைக்கேள்விகள் முழுதும் காந்தியடிகளைப்பற்றித்தான்.

* * *

ஒன்பது கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட நியூயார்க் புத்தகசாலையில் காந்திஜீயைப் பற்றிய புத்தகங்களைப் பார்க்கச் சென்றேன். அங்குள்ளவர் கூறினர்: " காந்தியைப்பற்றி ஆங்கிலத்தில் மட்டும் 200 புத்தகங்கள் இருக்கின்றன. இன்னும் 26 பாஷைகளிலும் புத்தகங்கள் உள்ளன. இதைத் தவிர

காந்தி எழுதிய புத்தகங்கள் வேறு இருக்கின்றன."

* * *

அமெரிக்காவிலிருந்து ஐரோப்பாவுக்கு வருகையில் ஓர் இங்கிலீஷ் கப்பலில் காந்தியடிகள் பிறந்த தினத்தைக் கொண்டாடினோம். பல அமெரிக்கர்கள் கலந்துகொண்டனர். அன்று எங்களுக்கு இந்திய உணவு அளிக்கப்பட்டது.

* * *

ஐரோப்பாவில் எங்குச் சென்றாலும் காந்தியடிகளைப்பற்றிய கேள்விதான். இத்தாலியில் இந்தியர்களைக் கண்டால் பல சமயங்களில் "காந்தி" என்று தான் அழைக்கின்றனர்.

* * *

ஐரோப்பாவிலிருந்து ஆஸ்திரேலியா செல்லும் கப்பலில் போலந்து தேசப் பெண் ஒருத்தியைச் சந்தித்தேன். ஒரு பாட்டுப் பாடினாள். அதில் இருமுறை மகாத்மா காந்தி என்றாள். கேட்டபொழுது போலந்தில் உலகப் பெரியார்கள்மீது பாடுவதுண்டென்றும், அவர்களுள் காந்தியடிகள் முக்கியமானவரென்றும் குறிப்பிட்டாள்.

* * *

ஹிட்லர், முசோலினி ஆகியோர் பெயர் உலகம் முழுதும் தெரிந்திருக்கலாம். இவர்களைப் பலர் வெறுக்கின்றனர். ஆனால் உலகிற் பெரும்பான்மையோரால் புகழப்படும் தனிப் பெருமையுடையவர் காந்தியடிகள் ஒருவர் தான். இன்று அடிமை இந்தியனுக்கு

வெளிநாடுகளிலே சிறிதளவாவது கௌரவம் இருக்குமானல் அதற்குக் காந்தியடிகளே காரணம். காந்தியடிகள் நீடுழி வாழ்க!

---

# 2. கவிஞர் நோகுச்சி

இன்று உலகப் புகழ் பெற்றுள்ள ஜப்பானியக் கவிஞர்களில் யோனே நோகுச்சி ஒருவர். ஜப்பானிய பாஷையிலும் ஆங்கில பாஷையிலும் கவி புனையும் ஆற்றல் பெற்றுள்ளார் இக் கவிஞர். சென்ற ஆண்டிலே இவர் இந்தியாவிற்கு விஜயம் செய்து பல சர்வகலாசாலைகளில் பிரசங்கம் செய்தார். காந்தியடிகளைச் சந்தித்து உரையாடினர். காந்தியடிகளின் வசீகர சக்தியால் கவரப்பெற்ற இக் கவிஞர், இந்தியாவைப்பற்றி ஜப்பானிய பாஷையில் ஒரு புத்தகம் எழுதியுள்ளார்.

சில மாதங்கட்குமுன் இக் கவிஞரைச் சந்திக்கும்படியான சந்தர்ப்பம் கிடைத்தது. டோக்கியோ நகரில் சக்குராயாமா என்ற பகுதியிலுள்ள இவரில்லத்திற்குச் சென்றேன். இயற்கை வனப்பு நிறைந்த சிறு தோட்டமொன்றின் நடுவேயுள்ள அழகிய வீட்டிலே இக் கவிஞர் எளிய வாழ்க்கை நடத்துகிருர். வீட்டினுள்ளே சென்றதும் வயது முதிர்ந்த ஓர் அம்மையார் வரவேற்றுச் சிறிய அறையொன்றிலே உட்காரும்படி கூறினர். கவிஞர் சில நிமிஷ நேரங்களில் அவ்வறைக்கு வருவார் என அறிவிக்கப்பட்டது. அவ்வறையை ஒருமுறை சுற்றி நோக்கினேன். பனையோலையில் எழுதப்பெற்ற வரவேற்புகள் ஒருபுறம்;

வெள்ளித் தாம்பாளம், வெள்ளிக் கூஜா முதலிய சன்மானப் பொருள்கள் ஒருபுறம்; தாகூரின் அரிய நூல்கள் பிறிதொருபுறம்! இந்திய சர்வகலாசாலைகள் அளித்த வரவேற்புப் பத்திரங்கள் அறையிலிருப்போர் படிக்கத்தக்க நிலையில் அமைக்கப் பெற்றிருந்தன.

சில நிமிஷங்களில் கவிஞர் நோகுச்சி ஜப்பானிய உடையோடு அவ்வறைக்கு வந்தார்; இந்திய முறையில் நமஸ்காரம் செய்து வரவேற்றார்.

"சென்னையில் வெப்பம் அதிகமல்லவா? சென்னையைப் பற்றிய சந்தோஷ நினைவுகள் இன்னும் என்னுள்ளத்திலே தோன்றுகின்றன. ஸ்ரீமான் சத்தியமூர்த்தியோடு காங்கிரஸ் பொருட்காட்சிக்குச் சென்றேன். சென்னை மாகாணத்தவர் பெரிதும் உணர்ச்சி யுடையவர்கள் என்பதில் ஐயமில்லை" என்றார். நான் சென்னை மாகாணத்தைச் சேர்ந்தவனென்பதும், பத்திரிகை நிருபன் என்பதும் கவிஞருக்கு ஏற்கனவே தெரியும்.

"உதய சங்கரைச் சந்தித்தேன்; அவர் நடனம் சிறந்தது என்பதுமட்டுமன்று, அவரும் சிறந்த மனிதர்" என்றார்.

இந்தியத் தலைவர்களோடு அவர் கொண்டிருந்த தொடர்பை எண்ண எண்ண அவர் மகிழ்ச்சியடைந்தார். இந்தியாவைப் பற்றிக் **காண்டெம்பரரி ஜப்பான்** (Contemporary Japan) என்ற பத்திரி

கைக்கு அனுப்புவதற்காக இருந்த கட்டுரையைப் படித்தார். இடையிடையே உரையாடினேம்.

“ காந்தியடிகள் உலகிற் சிறந்த மனிதர். அவர் புன்சிரிப்பு உலகத்தைக் கொள்ளைகொள்ளும் தன்மையது. அவர் சொல்லும் ஒவ்வொரு சொல்லிலும் தத்துவம் அடங்கியிருக்கிறது. அவருக்கேற்ற காரிய தரிசி மகாதேவ தேசாய். அவருடைய அடக்கத்தையும் உபசாரத்தையும் நான் மறக்க முடியாது ” என்றார் கவிஞர்.

ஜப்பானில் இந்தியாவைப் பற்றிப் பிரசாரம் செய்பவர்களில் இக்கவிஞர் குறிப்பிடத் தக்கவர். ரேடியோப் பிரசங்க மொன்றில் இந்தியாவைப் பற்றிச் சில குறைகள் கூறினர். இதனைக் கண்டு ஜப்பானிலுள்ள சில இந்தியர்கள் சீறி விழுந்தனர். நம்மிடம் குறைகள் உண்டு என்பது நமக்குத் தெரியும். அவைகளை நிவர்த்திக்க நாம் முயற்சி செய்யவேண்டும். நியாய மனப்பான்மை யுள்ளவர்கள் ஒரு நாட்டின் பெருமையையும் குறையையும் ஒருங்கே கூறத்தான் செய்வார்கள். வெளி நாட்டினர், நம் குறைகளை மறைத்து நம்மைப் புகழவேண்டு மென்று எதிர் பார்ப்பது அறியாமையே யாகும். நோகுச்சி **அசாஹி** என்ற பிரபல பத்திரிகையில் எழுதிய தொடர்ச்சியான கட்டுரைகளினுல் ஜப்பானியர்கட்கு இந்தியாவைப்பற்றிச் சிறிது தெரிந்தது. நோகுச்சி இந்தியாவைப்பற்றிக் கூறிய குறைகளைக்காட்டிலும்

பெருமைகள் அதிகம் என்பதுதான் நாம் கவனிக் கத்தக்கது.

கவிஞர் நோகுச்சி நகோயா நகருக்கருகேயுள்ள சுசிமா என்ற கிராமத்தில் பிறந்தார். பதின்மூன்ரும் வயதில் டோக்கியோ நகருக்கு வந்து கெய்யோ சர்வகலாசாலையில் பயிற்சி பெற்ருர்; 18-வது வயதில் அமெரிக்கா சென்ருர்; பதின்மூன்ருண்டுகள் அமெரிக் காவில் தங்கினர்; இடையே ஐரோப்பாச் சென்று திரும்பினர்; 'கண்டதும் காணுததும்' என்ற ஆங் கிலப் பாடல்களை முதலில் அமெரிக்காவில் பிரசுரித் தார். இவருடைய நூல்கள் ஜெர்மன், பிரெஞ்ச் முதலிய பாஷைகளிலே மொழிபெயர்க்கப் பெற்றுள் ளன. ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையாரின் அழைப்புக் கிணங்கி இங்கிலாந்திற்குச் சென்று பிரசங்கம் செய் தார். அப்பொழுதுதான் சரோஜினி தேவியை முதன் முதலாகச் சந்தித்தார். ஐரோப்பாவிற் சுற்றுப் பிரயா ணம் செய்தபின் தாய்நாடு திரும்பினர். மீண்டும் அமெரிக்காவிற்குச் சென்று பல பிரசங்கங்கள் செய் தார். சமீபத்தில் இவர் இந்தியா, சிலோன், பர்மா முதலிய நாடுகட்கு விஜயம் செய்து சொற்பெருக்கு நிகழ்த்தியது வாசகர்கட்குத் தெரியும்.

இவரிடம் நான் விடைபெற்றபொழுது "இந்தியா வைப்பற்றிய என் எண்ணங்களை நான் என்றும் மறக்க முடியாது. அவ்வரிய நாட்டிற்கு மீண்டும் செல்லும் சந்தர்ப்பத்தை எதிர்பார்க்கிறேன். நான் இந்தியாவிற்

குச் சென்றபொழுது பண்டித நேரு ஐரோப்பாவி லிருந்தார். அவரைச் சந்திக்கும் பாக்கியம் கிடைக்க வில்லை. என் எண்ணங்களைக் கவிகளாகப் புனைய எண்ணியுள்ளேன்” என்றார் கவிஞர். இவருடைய சிறந்த கவிகளை நாம் எதிர்பார்ப்போமாக!

# 3. ஹாவாய்த் தீவுகள்

பசிபிக் மகா சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ள இவ்வழகிய தீவுகளைக் காப்டன் குக் என்பவர் 1788-ம் வருடத்தில் கண்டுபிடித்தார். பல நூற்றுண்டுகளாக இத்தீவுகள் உலகத்தின் மற்றப் பகுதிகளுடன் எவ்விதத் தொடர்புமில்லாதிருந்தன. ஆனால் இன்றைய நாகரிக உலகத்திலே ஹாவாய்த் தீவுகள் ஒரு ஸ்தானம் வகிக்கின்றன. பசிபிக் மகா சமுத்திரத்தில் செல்லும் பெரும்பாலான கப்பல்கள் ஹொனலுலு துறைமுகத்தில் தங்காமல் செல்வதில்லை.

அமெரிக்காவின் பசிபிக் கரையோரத்திலிருந்து சுமார் 2,100 மைல் தூரத்திலும், ஜப்பானிலிருந்து சுமார் 3,500 மைல் தூரத்திலும் இத் தீவுகள் அமைந்திருக்கின்றன. ஹவாய் என்பது பிரதம தீவு. மா ஊய், ஓ ஹா ஊ, கா ஊ ஆய், கலாவா ஓ முதலிய நான்கு தீவுகளும், இன்னும் மிகச் சிறிய தீவுகள் பலவும் இவைகளெல்லாம் சேர்ந்து ஹாவாய்ப் பிரதேசங்கள் (Territory of Hawaii) என்றழைக்கப்படுகின்றன. இத்தீவுக் கூட்டங்களின் விஸ்தீரணம் 6,450 சதுர மைல்களாகும்.

காப்டன் குக், இத்தீவுகளைக் கண்டுபிடித்தபொழுது இவைகள் தனித்தனி அரசர்களின் ஆட்சியில் இருந்தன. பின்னர், காமிகாமேஹா என்ற வீரம் நிறைந்த மன்னன் மற்றத் தீவுகளையெல்லாம்

21 APR 1982

வென்று தனி அரசனாக விளங்கினான். இவன் சிறந்த நீதிமானாக இருந்ததோடு குடிகளின் நன்மைக்காகப் பாடுபட்டான். ஹாவாயர்கள் இவனைத் தெய்வ மாகக் கொண்டாடினர். இவனைப் பற்றிய கதைகளும் பாட்டுகளும் எண்ணில. இவைகள் தேசீயப் பொக் கிஷமாக இருப்பதோடு ஹாவாயர்களுக்குத் தேசீய உணர்ச்சியையும் ஊட்டுகின்றன. இவனிறந்த பின் னர் நாட்டிலே குழப்ப முண்டாயிற்று. அமைதி யின்மை நிலவிற்று. மதப்பற்றுடைய சில ஹாவாயர் களுங்கூட மதத்தில் நம்பிக்கை யிழந்தனர். 'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' என்று வாழத் தலைப் பட்டனர். காமிகாமேஹாவோடு ஹாவாயர்களின் தேசீய வாழ்க்கை ஒரு முடிவுக்கு வந்தது என்று கூற லாம். இச்சிறந்த மன்னனின் பொன்னிறமுள்ள கம் பீரமான உருவச்சிலை இன்று ஹொனலுலு நகரை அலங்கரிக்கிறது.

ஹாவாயர்களின் பூர்வீகத்தைப் பற்றிச் சரித்திர ஆசிரியர்களே இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை. காட்டுத் தேவதைகளை வணங்கினார்களென்றும், பெருத்த மூடநம்பிக்கை கொண்டிருந்தார்களென்றும் தெரிகிறது. பெரும்பாலான மக்களுக்கு மதமே கிடை யாது. சந்தர்ப்பத்தை உபயோகப்படுத்திக் கொள் வதில் மிகச் சிறந்தவர்களான அமெரிக்கப் பாதிரிகள் இச்சந்தர்ப்பத்தையும் உபயோகப்படுத்திக்கொண் டதில் ஆச்சரியமில்லை. தங்கள் குறைகளைப் போக்க வகையறியாத இப்பாதிரிகள் ஹாவாயர்களுக்கு ஞான ஸ்நானம் செய்யும் முயற்சியி லீடுபட்டார்கள்.

பலவித குழப்பங்கட்குப் பின்னர், 1898-ம் வருடத்தில், ஹாவாய்த் தீவுகள் ஐக்கிய அமெரிக்கா வோடு சேர்க்கப்பட்டன. ஏகாதிபத்தியப் பைத்தியம் பிடித்த பிரிட்டன்போன்ற நாடுகள் இத்தீவுகளின் மேல் கண்வைத்த போதிலும் பயனில்லாது போயிற்று. இத்தீவுகள் அமெரிக்காவின் குடியேற்ற நாடுகளல்ல; அல்லது அமெரிக்காவின் ஆட்சியிலுள்ள நாடுகளுமல்ல. இவைகள் அமெரிக்காவின் ஒரு பகுதியேயாகும். அமெரிக்காவின் எல்லையாகவும் இவைகள் கருதப்படுகின்றன. ஆனாலும் ஸ்டேட்டுகளுக்குள்ள உரிமைபோன்று ஹாவாய்க்கு உரிமை கிடையாது. ஹாவாய் மக்களில் தேர்ந்தெடுக்கப் பெற்ற ஒரு பிரதிநிதி செனெட் சபையில் அங்கம் வகிப்பார். விவாதங்களில் கலந்துகொள்ளத்தான் இவருக்கு உரிமையுண்டு. ஓட்டுரிமை கிடையாது.

ஹாவாய்த் தீவுகளின் கவர்னர், நீதிபதிகள் முதலியவர்களை அமெரிக்காவின் குடியரசுத் தலைவரே நியமனம் செய்வார். இக் கவர்னர் செனெட் சபைக்குப் பொறுப்பாளி. ஹாவாயில் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற ஜனப்பிரதிநிதி சபை இருக்கிறது. இச் சபை இரண்டு வருடத்திற்கொரு முறை அறுபது நாட்கள் கூடுகின்றது. இச்சபை செய்யும் தீர்மானங்களை நிராகரிக்கும் உரிமையும் (Veto Power) கவர்னருக்கு உண்டு. பல இலாகாக்களின் தலைவர்களை—ஜனப்பிரதிநிதி சபையின் சம்மதத்தோடு—கவர்னர் நியமனம் செய்வார். ஸ்தல ஸ்தாபனங்களெல்

லாம் ஜனப்பிரதிநிதி சபையின் ஆட்சிக்கு உட்பட்டதாகும்.

இத் தீவுகளின் ஜனத்தொகை சுமார் 3,24,000 தான். இவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் அமெரிக்கக் குடிகள் (American citizens). ஜனத்தொகையைப் பற்றிய புள்ளி விவரங்களை நோக்கினால் இது சர்வதேசமக்களைக் கொண்ட நாடு என்பது விளங்கும்:

| | | |
|---|---|---|
| அமெரிக்க, பிரிட்டிஷ், ஜர்மன், ரஷ்யன் | 36 | ஆயிரம் |
| சீனர்கள் | 25 | ,, |
| பிலிப்பைன் தீவுக்காரர்கள் | 50 | ,, |
| ஹாவாயர்கள் | 21 | ,, |
| ஜப்பானியர் | 128 | ,, |
| கொரியர் | 6 | ,, |
| ஹாவாயர்கட்கும் மற்றவர்கட்கும் பிறந்தவர்கள் | 22 | ,, |
| போர்ச்சுகீஸியர் | 27 | ,, |
| போர்ட்டோ ரிக்கன் (Porto Rican) | 6 | ,, |
| ஸ்பானியர்கள் | 2 | ,, |

இத்தீவிலே நிறத் திமிரோ ஜாதித் துவேஷமோ கிடையாது. எல்லோரும் சமத்துவமாகவும், சகோதரப் பான்மையுடனும் சுதந்தரத்துடனும் வாழ்கின்றார்கள். ஜப்பானியர்கள் அளவுக்கதிகமாக இங்குக் குடியேறி யிருப்பது குறிப்பிடத்தக்கது. எக்காரணங் கொண்டும் ஜப்பானியர்கள் இங்குக் குடியேற இப்

பொழுது அனுமதிக்கப் பெறுவதில்லை. ஹாவாயர்கள் பழுப்பு நிறமுள்ள மக்கள். அழகிய தோற்றமுடையவர்கள். கலப்பு மணம் அதிகரித்து விட்டபடியால் உண்மையான ஹாவாயர்களைக் காண்பதே கஷ்டமானதாகும்.

ஹாவாயர்களின் பாஷையில் 12 எழுத்துக்கள் தான் உள்ளன. 'ட' என்ற எழுத்துக் கிடையாது. அதற்குப் பதிலாக 'க' என்ற எழுத்தை உச்சரிக்கிறார்கள். இப்பாஷைக்குப் போதுமான இலக்கணம் கிடையாது. ஒரே வார்த்தைக்குச் சமயத்தையொட்டிப் பல அர்த்தங்கள் இருக்கின்றன. இக்காரணங்களால் இப்பாஷை மறைந்து வருகிறது. ஆங்கிலமே அனைவரும் பேசும் பாஷையாகும். ஹாவாயின் தேசீய பாஷை ஆங்கிலம் என்று கூறுவது மிகையாகாது. ஆனாலும் ஹாவாய் பாஷையில் மற்றவர்கள் பேசுவதைக் கேட்கும்பொழுது இனிமையாக இருக்கிறது. சில வார்த்தைகளைக் கேளுங்கள் :

| | | |
|---|---|---|
| அலோஹா | — | வந்தனம் |
| கேக்கிகனே | — | பையன் |
| கேக்கி மாஹினி | — | பெண் |
| விக்கி விக்கி | — | அவசரமாய் |
| ஹலே புலே | — | கோவில் |
| கூலி கூலி | — | நில்லுங்கள் |
| ஹுலா ஹுலா | — | தேசீய நாட்டியம் |
| மாலிஹினி | — | அந்நியர் |

ஹாவாய்த் தீவுகளில் 175 பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. 1,719 ஆசிரியர்கள் 55,044 மாணவ மாணவிகட்குப் பாடங் கற்பிக்கின்றனர். இப்பள்ளிக்கூடங்கள் அரசாங்கத்தாரால் நடத்தப்பெறுவனவாகும். தனிப்பட்டவர்கள் நடத்தும் பள்ளிக்கூடங்களில் சுமார் 10 ஆயிரம் மாணவ மாணவிகள் பயில்கின்றனர்.

இந்நாட்டில் கரும்பு உற்பத்தி அதிகம். முதன் முதலாக காப்டன் குக், இந்நாட்டைக் கண்டுபிடித்த பொழுது சில கரும்புச் செடிகளைக் கொண்டுவந்தார். இப்பொழுது வருடமொன்றுக்கு 20 கோடி ரூபாய் பெறுமான எட்டு லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்யப்படுகிறது.

அடுத்தபடியாக அன்னாசிப் பழம். 1888-ம் வருடம் ஜான் கிட்வெல் (John Kidwel) என்பார் முதலாவது அன்னாசிச் செடியைக் கொண்டு வந்தார். அன்னாசியை, பழமாகவும் சாறாகவும் பக்குவப்படுத்தி ஏற்றுமதி செய்கின்றனர். வருடமொன்றுக்கு ஏழுகோடி ரூபாய் பெறுமான அன்னாசி ஏற்றுமதி செய்யப்படுகிறது.

மூன்றாவதாக யாத்திரை வாசிகள். இதனை ஒரு தொழிலாகக் கருதுவோமானால் இத்தொழில் இங்கு மூன்றாவது ஸ்தானம் வகிக்கிறது. வருடத்திற்குச் சுமார் 20 ஆயிரம் யாத்திரை வாசிகள் இங்கு வருகின்றனர். இங்குச் சராசரி சீதோஷ்ணம் 74 டிகிரிதான்.

2

மிகவும் ஆரோக்கியமான இடமாக இருப்பதால் பல பணக்காரர்கள் உல்லாச யாத்திரையாகவும், சிலர் உடல்நலத்தின் பொருட்டும் இங்கு வருகின்றனர். மிகச் சிறந்த அரண்மனைபோன்ற ஹோட்டல்கள் பல. நீளமான தார் ரோடுகள்; போக்குவரத்து வசதிகள் நன்கமைந்திருக்கின்றன. தினந்தோறும் மற்றத்தீவுகளுக்கு ஆகாய விமான வசதிகள் உண்டு. பெரும்பாலோர் சொந்த மோட்டார்கள் வைத்திருக்கின்றனர். ஒருசில குதிரை வண்டிகளே தென்படும். துறைமுகத்திற் கப்பல்கள் தங்கும்பொழுது நூற்றுக் கணக்கான அழகிய இளம் ஹாவாய்ப் பெண்கள் ஹுலா ஹுலா நடனமாடுவர். யாத்திரை வாசிகளின் கழுத்திலே அழகிய மலர் மாலைகளைப் போடுவார்கள். இம்மாலைகள் ஒரு ரூபாய் முதல் பத்து ரூபாய் வரை விலையுள்ளனவாகும். மாலைகள் அணிந்து கொள்வது இந்நாட்டு வழக்கம். மாலைகள் அணிய சமய சந்தர்ப்பங்கள் பார்ப்பதில்லை; நினைத்த பொழுதெல்லாம் அழகிய மாலைகளை அணிந்து ஆனந்தமாகப் பாடிக்கொண்டு ஆண்களும் பெண்களும் வேலை செய்வார்கள். தென்னை மரங்களும் பனை மரங்களும் இந் நாட்டில் ஏராளம். தேங்காய் மூடிகளைக்கொண்டு இவர்கள் தயாரிக்கும் பொருள்கள் கலைவனப்புடையவாகும்.

இன்னும் பல தொழில்கள், காபி, மீன் பாடம் செய்தல், வாழைப்பயிர், விவசாயம் முதலியனவும் உண்டு. விவசாயம் வரவர க்ஷீணதசை யடைந்து

வருகிறது. ஜப்பானியர்கள் ஜப்பானிலிருந்து அரிசி இறக்குமதி செய்கின்றனர். விலை அதிகமாய் இருந்த போதிலும் அவர்கள் பொருட்படுத்துவதில்லை. ஹாவாய்த் தீவுகளில் அமெரிக்கக் குடிகளாக வாழ்ந்த போதிலும் ஜப்பானியர் ஜப்பானியர்களாகவே யிருக் கிறார்கள்.

ஹாவாயர்கள் மூட நம்பிக்கையின் அடிமைகள்; சில சமயங்களில் தன்னம்பிக்கை இழந்து விடுவார் கள். ஜனத்தொகையில் 16-ல் ஒரு பங்குள்ள இந்த ஹாவாயர்கள் பெரும்பாலும் கிராமங்களிலே—குடி சைகளிலேதான் வசிக்கிறார்கள். இயற்கையிலே இன்பங் காண்பதில் இவர்கட்குப் பிரியமதிகம். களி யாட்டங்களிலே அதிகக் கருத்துச் செலுத்துவார்கள். இவர்களின் வாழ்க்கை மிக எளிமையானது. சோறும் மீனுந்தான் இவர்களின் பிரதம ஆகாரம். சீனர் உணவு, ஜப்பானியர் உணவு, அமெரிக்கர் உணவு முதலியவைகளையும் இவர்கள் உண்கின்றனர். பெரும்பாலும் அமெரிக்கர்களைப் போன்றே ஆடை யணிகின்றனர். சங்கீதத்தில் இவர்கட்கு எல்லையற்ற பிரியம்.

மோர்மன் என்ற மதத்தினர் இங்குள்ளனர். இவர்களுடைய அழகிய ஆலயம் ஹொனலுலு நகரில் அமைக்கப் பெற்றிருக்கிறது. இது முற்றிலும் சலவைக் கல்லாலாகிய கட்டிடம்.

பிஷப் மியூசியம் ஹொனலுலுவிலுள்ள பிரசித்தி பெற்ற பொருட்காட்சிசாலை. இது ஹாவாய்த் தீவு களின் முன்னேற்றத்தை ஒருவாறு நன்கு விளக்கும். வைக்கிக்கி என்பது ஹொனலுலு நகரின் ஒரு பகுதி; நான்கு மைல் நீளமுள்ள அழகிய கடற்கரை. நாக ரிக வசதிகளுள்ள பல வீடுகளும் ஹோட்டல்களும் இங்குள்ளன. வைக்கிக்கி தியேட்டர் உலகிற் சிறந்த தியேட்டர்களில் ஒன்று. தியேட்டருக்கு உள்ளே இருந்தபோதிலும் வெட்ட வெளியில் இருப்பது போலத் தோன்றும். உண்மையான மரங்கள் ஹாலின் இருபுறங்களிலும் இருக்கின்றன. கூரையை நோக்கினால் நீலநிறமுள்ள ஆகாயம். மேகங்கள் நகர்ந்த வண்ணமாய் இருக்கும். நட்சத்திரங்கள் பிரகாசிக்கும். உண்மையான ஆகாயம் மப்பும் மந்தா ரமுமா யிருந்தபோதிலும் இந்தச் செயற்கை ஆகாயம் எப்பொழுதும் பிரகாசமாயிருக்கும்.

ஐம்பது ஆண்டுகளுக்குள் முன்னேற்ற மடைந் துள்ள இவ்வழகிய தீவுகளைப் பார்க்கத் தவறாதீர்கள்! சந்தர்ப்பத்திற்காகக் காத்துக் கொண்டிராதீர்கள்! சந்தர்ப்பத்தை உண்டாக்கிக் கொள்ளுங்கள். அலோஹா!

# 4. அமெரிக்காவில்

ஜப்பானிலிருந்து சான்பிரான்ஸிஸ்கோவுக்கு 24 நாட்கள். ஹாவாய்த்தீவில் தங்கிய இரண்டு மூன்று நாட்களைத் தவிர மற்ற நாட்களெல்லாம் கப்பலில் தான். சான்பிரான்ஸிஸ்கோ துறைமுகத்தைக் கப்பல் நெருங்க நெருங்க, 'புது உலகத்தைப் பார்க்கப் போகிறோம்' என்ற உற்சாகம் அதிகரித்தது. "அதோ! ஐம்பது அறுபது மாடிக்கட்டிடங்கள் தோன்றுகின்றனவே, அதுதான் சான்பிரான்ஸிஸ்கோ" என்றார் அருகில் நின்ற அமெரிக்கர். சில நிமிஷங்களுக்குள், உலகிற் பெரிய பாலமென்று கருதப்படுகிற Golden Gate Bridge-ன் (தங்கவாசல் பாலம்) கீழே எங்கள் கப்பல் சென்றது. "இதோ தெரிகிற தீவும் கட்டிடமும் என்ன?" என்று கப்பலிலிருந்த ஜப்பானிய அதிகாரியைக் கேட்டேன். "அமெரிக்காவிலுள்ள, தப்பியோட முடியாத சிறைகளிலே இது ஒன்று. பேர்போன அல்காபோண் இங்கேதான் சிறை வைக்கப்பட்டிருக்கிறான்" என்று கூறினார்.

கப்பல் துறைமுகத்தை நெருங்கிற்று. அப்படியே கரையில் தாவிக் குதிக்கலாமா என்று கூடத் தோன்றியது. வழக்கமான சடங்குகள் முடிந்த பின், கப்பலதிகாரிகள் 'கருணை'யினால் கரைக்குச் சென்றேன். 'புதிய உலகின்' முதல் துறைமுகத்

தின் இரவுக் காட்சிகள் எனக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தன. மூன்று வாரங்கள் ஜப்பானியக் கப்பலில் நிறையச் சாப்பிட்டதன் பயனாக எனது உடம்பு மெலிந்திருந்தது. ஆர்வத்தோடு ஓர் இந்தி யரின் வியாபார நிலயத்துக்குச் சென்று இந்திய உணவை ருசித்தேன்.

## முதல் அனுபவம்

மறுநாள், எங்கள் கப்பல் சான்பெட்ரோ துறை முகத்தை அடைந்தது. லாஸ் ஏஞ்சல்ஸ் நகரத்துக்கு இதுதான் துறைமுகம். கப்பல் ஏழு மணிக்குக் கரை சேர்ந்தது. எல்லோரும் சுலபமாகக் கரையிலிறங்கித் தங்களிஷ்டம்போல் சென்றனர். கப்பலில் இருந்த இந்தியன் நான் ஒருவன்தான். எனவே, துரதிர்ஷ் டமும் தொந்தரவும் எனக்குத் தான் நேர்ந்தது.

ஆஜானுபாகுவான இமிகிரேஷன் ஆபீசர் முன்னே கொண்டுபோய் நிறுத்தப்பட்டேன். என் னுடைய பாஸ்போர்ட்டைப் பலமுறை பரிசீலனை செய்துவிட்டு என்னை உற்றுப் பார்த்தார். அச்சடித்த பாரம் ஒன்றைக் கொடுத்து அதைப் பூர்த்தி செய்யும் படி கூறினர். 'உனக்குப் புத்தி ஸ்வாதீன மிருக் கிறதா?' என்றொரு கேள்வி இருந்தது. இதைப் படித் ததும் எனக்கே சந்தேக முண்டாயிற்று. அந்த பாரத்திலுள்ள மற்ற கேள்விகளைப் படிக்கும்பொழுது என்னுடைய சந்தேகம் உறுதிப்பட்டது.

'உனக்கு எழுதப் படிக்கத் தெரியுமா?' என்பது மற்ருெரு கேள்வி. இதைப்பற்றி எனக்குச் சந்தேகமே உண்டாகவில்லை. அந்த பாரத்தை முற்றிலும் படித்து மூளை குழம்பியதற்குக் காரணம் நான் படித்த பாவந்தானல்லவா!

இதோடுமட்டும் என்னை விடவில்லை. இந்த பாரங்களைப் பூர்த்தி செய்வது அந்நியர் எல்லோருக்கும் பொதுவான சடங்கு. எனக்குத் தனியாக நேர்ந்த கஷ்டங்களைக் கூறி என்ன பயன்! அடிமை இந்தியர்களாகிய உங்களால் அதற்கு என்ன பரிகாரம் தேடமுடியும்? கடைசியாக இரவு ஒன்பது மணிக்குக் கப்பலை விட்டிறங்கினேன்.

நிறத் திமிர் வேகம்

முன்பின் தெரியாத ஒரு நாட்டிலே, நிறத் துவேஷம் நிறைந்த லாஸ் ஏஞ்சல்ஸ் நகரிலே எனது நிலை பரிதாபமாய் இருந்தது. கையில் சிறு பெட்டியுடன் ஓய். எம். சி. ஏ. க்குச் சென்று தங்குவதற்கு இடங் கொடுக்கும்படி கேட்டேன். என்னைப் பார்த்ததும் —என் நிறத்தைப் பார்த்ததும், அந்த அதிகாரிக்குக் கோபம் பொங்கிற்று. பாவம், அவர் என்னை நீக்ரோ என்று நினைத்துக் கொண்டார். தலைப்பாகையின்றி அமெரிக்கா செல்லும் இந்தியர்களிற் பலர் இக்கதிக்குத் தான் ஆளாகின்றனர். "தங்குவதற்கு இங்கு இடமில்லை" என்ருர். "வேறு தங்குவதற்கு ஏதாவது இடங்காட்டக் கூடுமா?" என்றேன். தம்மால் முடி

யாதென்று மறுத்து விட்டார். எங்கள் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்த அமெரிக்க இளைஞரொருவர் என்னைத் தனியாக அழைத்துத் தங்குவதற்கு அங்கே இடமிருக்கிறதென்றும், காரியதரிசியைப் பார்க்கும்படியும் கூறினார்.

விரைந்து சென்று காரியதரிசியைப் பார்த்தேன். ரங்கூன், டோக்கியோ ஓய். எம். சி. ஏ. காரியதரிசிகளின் அறிமுகக் கடிதங்களையும் கொடுத்தேன். நடந்ததை மறந்து விடுமாறு கூறி, நல்ல அறையொன்றை ஏற்பாடு செய்தார் காரியதரிசி.

## மின்னாத நட்சத்திரங்கள்

லாஸ் ஏஞ்சல்ஸிலும் ஹாலிவுட்டிலுமாகப் பல தினங்கள் கழிந்தன. இரவு நேரங்களில் ஹாலிவுட் புல்வார்டுகளுக்குச் சென்றேன். மின்னுகின்ற நட்சத்திரங்கள் ஒன்றும் எனக்குத் தென்படவில்லை. "அங்குள்ள நட்சத்திரங்கள் மின்னுகின்ற பொருள்கள் அல்ல" என்றார் கூடவந்த நண்பர்.

லாஸ் ஏஞ்சல்ஸிலிருந்து நியூயார்க் சுமார் 3,200 மைல்; ரயிலில் 4 நாள் பிரயாணம். இப்பிரயாணத்தில் கண்ட காட்சிகளை நினைக்கும்பொழுது இப்பொழுதுகூட மகிழ்ச்சி யுண்டாகிறது. இந்தப் பிரயாணத்தின் எதிர்பாரா அனுபவங்களிலே சிகரம் போன்றது ஒரே சம்பவந்தான்.

டெக்ஸாஸ் என்பது அமெரிக்காவிலுள்ள ஸ்டேட்டுகளில் ஒன்று. இந்தப் பகுதியில்தான் நிறத் துவேஷம் உச்சஸ்தானத்தை அடைந்திருக்கிறது. இந்த ஸ்டேட்டின் வழியாக ரயில் சென்றபொழுது டல்லாஸ் என்ற ஸ்டேஷனில் பகலுணவுக்காக முப்பது நிமிஷம் ரயில் தாமதித்தது. ரயில்வே உணவுச் சாலேக்குச் சென்றேன். நீக்ரோக்களுக்கென்று மறைவாக ஒரு தனியிடம் ஒதுக்கியிருக்கின்றனர். வேலேக்காரப்பெண் நீக்ரோக்களுடன் உட்காரும்படி கூறினுள். எனக்குமுன்னே உட்கார்ந்த நீக்ரோக்களுக்கு ஒரு பெண் பரிமாறினுள். என்னை அவள் கவனிக்கவே யில்லே. பத்து நிமிஷமாயிற்று, பதினைந்து நிமிஷமுமாயிற்று. பசியொருபுறம்! அவமானம் ஒருபுறம்! ரயிலுக்கு நேரமாகி விட்டதே என்ற திகில் மறுபுறம்! இவைகளே யெல்லாம் தாங்கமாட்டாது ஹோட்டல் மானேஜரிடம் சென்று நான் ஓர் இந்துவென்றும் இம்மாதிரி நடத்தப்பட்டேன் என்றும் கூறினேன்.

## ரயில் நின்றது

அவர் நல்ல மனிதர். வருத்தப்பட்டார்; மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். தனது அறைக்கு அழைத்துச் சென்று தனியாக உணவு பரிமாறும்படி செய்தார். இது மட்டுமல்ல. ரயில்வே கார்டை அழைத்து நான் சாப்பிட்டு ரயிலேறும்வரை ரயிலே நிறுத்தும்படி கூறினுர். சில நிமிஷங்களுக்கு முன் நேர்ந்த அவமானத்தையும், இப்பொழுது ஓர் இந்திய மாண

வனுக்காக ஐக்கிய அமெரிக்கா நாட்டில் ஒரு ரயில் நிறுத்தப்படுவதையும் நினைத்தபொழுது எனக்கே ஆச்சரியமுண்டாயிற்று.

நான்காவது நாள் நியூ யார்க் நகரத்தையடைந் தேன். ரயில்வே ஸ்டேஷனிலிருந்து வெளியே வருவ தற்கே பல நிமிஷங்கள் ஆயின. 'எம்பயர் ஸ்டேட் பில்டிங்ஸ்' எங்கே யிருக்கிறதென்று ஒருவரைக் கேட் டேன். அவர் என்னைப் பார்த்துச் சிரித்தார். அவர் சிரித்ததின் அர்த்தம் எனக்குப் பின்னர்தான் விளங் கிற்று. அதே வீதியிலிருந்த மிக உயரமான ஒரு கட்டி டத்தைக் குறிப்பிட்டுக் காட்டினார். அந்தக் கட்டிடத் திற்கு எதிரே தான் எனது பள்ளிக்கூடம். பிரின்சி பாலைக் கண்டு விஷயங்களைத் தெரிவித்த பின்னர் எம் பையர் ஸ்டேட் கட்டிடத்துக்குச் சென்றேன். அங்கு நின்ற வேலைக்காரன் உச்சிக்குச் செல்ல ஒரு டாலர் தான் கட்டணம் என்று கூறி அந்தக் கட்டிடத்தைப் பற்றிய சிறு புத்தகமொன்றைக் கொடுத்தான்.

### ராட்சஸ வீடு

102 மாடிகள், 1,248 அடி உயரம், இருபதாயிரம் ஜனங்கள் வேலை செய்கிறார்கள், கட்டிடத்தின் மதிப்பு 15 கோடி ரூபாய், மேலே செல்ல 32 லிப்டு கள் என்றெல்லாம் அப் புத்தகத்தில் படித்தேன். உச்சிக்குச் சென்று கீழே நோக்கியபோது எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. ஏனென்றால் தலை சுழன்றது.

மனிதனுடைய சக்தியைப்பற்றி ஆச்சரியப் பட்டுக்கொண்டே பூமிக்குக் கீழ் ஓடும் ரயில்வே நிலயத்தை நோக்கி நடந்தேன். மணிக்கு 60 மைல் வேகமுள்ள இந்த ரயில் பத்து நிமிஷத்தில் 125-வது வீதியை அடைந்தது.

### திமிரின் நடுவே சோதரத்துவம்

ராக்பெல்லர் என்பது உலகறிந்த பெயர். இவ்வள்ளல் கோடி ரூபாய் செலவில் நியூயார்க் நகரில் 'இண்டர் நாஷனல் ஹவுஸ்' என்ற மாணவர் விடுதி அமைத்துள்ளார். இங்குள்ள இந்தியச் சமூகத்தில் நானும் ஐக்கியமானேன். 52 தேசங்களைச் சேர்ந்த 300 மாணவர்களும் 300 மாணவிகளும் இங்கு வசிக்கின்றனர். இவர்களுடைய உடையும், பாஷையும் வெவ்வேறு விதமானது. ஆனால் இவர்கள் அனைவரும் ஒரே மாதிரி உடையணிகின்றனர். ஒரே பாஷை பேசுகின்றனர்.

வெளி யுலகில் நடைபெறாத சில 'அதிசயங்கள்' இந்த வீட்டிலே நிகழ்கின்றன. ஜப்பானியனும் கோரியப் பெண்ணும் கைகோத்துச் செல்வார்கள். ஜர்மனும் யூதனும் அளவளாவுவார்கள். சீனரும் ஜப்பானியரும் அந்நியோந்நியமா யிருப்பார்கள். ஆங்கிலேயனும் இந்தியனும் இணைபிரியாதிருப்பார்கள். அமெரிக்கனும் நீக்ரோவும் சரியாசனத்தமர்வார்கள். இத்தாலியனும் எதியோப்பியனும் கைகுலுக்கி க்ஷேமம் விசா

ரிப்பர். ஆனால் இவர்களிற் பெரும்பாலோர் சொந்த நாடுகட்குச் சென்றவுடன் சிறந்த தேசியவாதிகளாகி விடுகிறார்கள்.

நியூயார்க் வாழ்க்கை கொஞ்சநாள் வரை எனக்குப் பிரமிப்பைக் கொடுத்தது. மனிதர்கள் இயந்திரங்களின் அடிமைக ளாகிவிட்டார்கள் போலத் தோன்றியது. வார முடிவொன்றில் அமெரிக்கக் குடும்பமொன்றுக்குச் சென்றிருந்தேன். அந்த அம்மையார் வீடு முழுமையும் காட்டினார். வழக்கம்போல் அமெரிக்கர் வீடு மிகவுஞ் சுத்தமாக இருந்தது. துணிமணிகளைத் துவைப்பது மின்சாரம். எச்சில் பிளேட்டுகளை சுத்தம் செய்வது இயந்திரம். வீடு பெருக்கும் கருவிக்குத் துணை செய்வது மின்சாரம். சமையல் செய்வதும் மின்சார அடுப்பில்தான்.

வீடுகளில் மட்டுமல்ல, அமெரிக்கர்களின் வாழ்க்கையே மின்சார மயமாகத்தான் இருக்கிறது. பூட்ஸ் துடைப்பது இயந்திரம். காசைப்போட்டவுடன் ஜன்னல் வழி உணவளிப்பது இயந்திரம். ஜன நெருக்கமுள்ள வீதியைக் கடப்பதற்கு மக்களைத் தூக்கிச் செல்வது இயந்திரம்.

**மோட்டாரில்**

கொஞ்ச நாளில் நியூயார்க் நகர வாழ்க்கை 'புளித்து' விட்டது. ஒரு நார்வீஜியன், ஒரு ஜர்மன், ஒரு ஹாலந்துக்காரன் ஆகிய மூன்று மாணவர்களு

டன் சேர்ந்து அமெரிக்காவில் சுமார் பதினையாயிரம் மைல் மோட்டாரில் பிரயாணம் செய்தேன். ரயில் பிரயாணத்தைவிட, மோட்டார்ப் பிரயாணத்தில் எங்களுக்குச் செலவு குறைவு. புத்தம்புதிய செவர்லட் மோட்டார் ரூ. 1,400 தான். பெட்ரோல் காலன் 6 அணா. இதைக்கண்டு பொறாமைப் படாதீர்கள்; இது அமெரிக்காவில்.

மோட்டாரிலே நான்கு ஜன்னல்கட்கும் எங்களுடைய நான்கு தேசீயக் கொடிகளையும், மத்தியில் அமெரிக்கக் கொடியையும் அமைப்பதென்று நிச்சயித்தோம். கொடி விற்கும் கடைக்குச் சென்றேன். இந்தியக் கொடி தவிர மற்ற நான்கு கொடிகளும் கிடைத்தன. இந்தியக் கொடிக்குப் பதிலாக யூனியன்ஜாக் கொடியைக் கொடுத்தனர். அதை நான் மறுத்துவிட்டு, எனது சட்டையில் அணிந்திருந்த தேசீயக் கொடியை அவர்கட்குக் காண்பித்தேன். அந்த வியாபாரி ஆச்சரியத்தோடு நோக்கினார். "உலகில் உள்ள எல்லாத் தேசக் கொடிகளும் என்னிடமிருக்கின்றன—ஆனால் 35 கோடி மக்களுள்ள இந்திய தேசீயக்கொடி தெரியாமல் போய்விட்டதே" என்று வருந்தினார். 'ராட்டினம் அமைப்பது சிரமம், உங்கள் அவசரத்துக்கு முடியாது' என்றார். 'பாதகமில்லை, ராட்டினமின்றி மூவர்ணக் கொடியைக் கொடுங்கள்' என்றேன். விரைவில் கொடியைத் தயார் செய்து கொடுத்தார். ஆனால் அந்தக் கொடிக்கு மட்டும் பணம் பெற மறுத்து விட்டார்.

ஐந்து கொடிகள் அலங்கரிக்க, அமெரிக்க நாட்டின் உன்னத ரோடுகளிலே, ரேடியோ சங்கீத மளிக்கும் புதிய மோட்டாரிலே ஒன்பது வாரங்கள் பிரயாணம் செய்தோம். திறந்த வெளிகளிலே கூடார மடித்து உறங்கினேம். ஒரு சமயத்தில் ஒரே நாளில் 651 மைல் பிரயாணம் செய்தோம்.

சுதந்தர நினைவு

பிரபலமான கோடக் பாக்டரி, நயாகரா நீர் வீழ்ச்சி, டிட்ராய்ட் போர்டு மோட்டார் தொழிற் சாலை, சிக்காகோ நகரம், போல்டர் அணைக்கட்டு, கிராண்டு கான்யன், அமெரிக்க இந்தியர்களின் வாசஸ்தலம், நியூ மெக்ஸிகோ சுரங்கங்கள், ஹாலிவுட், நாஷனல் பார்க்குகள் முதலிய பலவற்றைப் பார்த்துக் கொண்டே சென்றதால் எங்கள் பிரயாணம் மிக உற் சாகமாக இருந்தது.

அமெரிக்காவின் தலைநகரான வாஷிங்டன் நகரம் தனியான அழகுடையது. ஆறு லட்சம் மக்கள் கொண்ட அந்நகரிலே மூன்றரை லட்சம் மோட்டார் கள் இருப்பதனுல் அதற்குப் பெருமையல்ல. 'மக்க ளால், மக்களுக்காக, மக்களுடைய அரசாங்கம்' என்ற கொள்கையை நிலைநாட்டிய ஆபிரகாம் லிங்க னின் ஜீவகளையுள்ள அந்தப் பிரம்மாண்டமான பளிங்கு உருவச்சிலையும், அதற்கு முன்னே ஆயிரக்

21 APR 1982

கணக்கான யாத்ரீகர்கள் தம்மை மறந்து தலை வணங்கி நிற்கும் உருக்கமான காட்சிகள் வாஷிங்டன் நகருக்குப் பெருமை யளிக்கின்றன.

---

# 5. சிவப்பு இந்தியர்கள்

அமெரிக்காவின் பூர்வீக குடிகளுக்குச் சிவப்பு இந்தியர்கள் என்று பெயர். இவர்கள் நிறம் சிவப்பல்ல. இவர்கள் இந்தியர்களுமல்லர். ஆனால் பெயர் மட்டும் சிவப்பு இந்தியர்கள்!

கொலம்பஸ் (Christopher Columbus) 1492-ம் வருடத்தில் இந்தியாவைக் கண்டுபிடிக்க யாத்திரை தொடங்கினார். இந்தியாவைக் காண்பதற்குப் பதிலாக அமெரிக்காவைக் கண்டார். இந்நாட்டுப் பூர்வீக குடிகள் இவருக்குத் தொந்தரவு கொடுத்தனர். கொலம்பஸ், இவர்களிற் சிலரைக் கைது செய்து ஸ்பானியர்கள் நியாயஸ்தலத்தின் முன் நிறுத்துகையில் இவர்களைச் 'சிவப்பு இந்தியர்கள்' என்று குறிப்பிட்டார். அதுமுதல் இப்பெயர் வழங்கலாயிற்று. கொலம்பஸ்தான் அமெரிக்காவை முதன்முதலில் கண்டார் என்பது சரித்திர ஆசிரியர்கள் கண்ட முடிவு. ஆனால் தம்முடைய பெயரை இந்நாட்டுக்குச் சூட்டும் பாக்கியம் கொலம்பஸுக்குக் கிடைக்கவில்லை. 1501-ம் வருடத்தில் அமெரிகோ வெஸ்புக்கி (Amerigo Vespucci) என்ற இத்தாலியர் தென்னமெரிக்காவிலுள்ள பிரேஜில் (Brazil) என்ற நாட்டைக் கண்டு பிடித்தார். பின்னர் ஐரோப்பா திரும்பியதும் தம்முடைய செயல்களைக் குறித்துப் புத்தகம் வெளியிட்டார். அதுமுதல் இந்நாட்டுக்கு 'அமெரிக்கா'

என்று பெயரிடப்பட்டது. 'சிவப்பு இந்தியர்கள்' 'அமெரிக்கா இந்தியர்கள்' ஆனார்கள்.

இவ்விந்தியர்களுடைய ஆதி வரலாறு சரித்திர ஆசிரியர்களின் எண்ணங்கட்கும் எட்டாத ஒரு மர்ம மாக இருக்கிறது. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர் வட அமெரிக்காவிலுள்ள அலாஸ்கா பகுதியும் ஆசியா கண்டமும் ஒரே நிலப்பரப்புடன் இருந்த தென்றும், இவ்விந்தியர்கள் ஆசியாவைச் சேர்ந்தவர்களென்றும், சில ஆராய்ச்சியாளர்கள் தக்க சான்றுகளுடன் கூறுகின்றனர். இவ்விந்தியர்கள் மெக்ஸிகோ இந்தியர்களின் வம்ச பரம்பரை யென்றும், பல்லாயிரம் ஆண்டுகட்கு முன் இங்குக் குடியேறினார்கள் என்றும் வேறு சில ஆராய்ச்சியாளர்கள் தக்க சான்றுகளுடன் கூறுகின்றனர். நம்புவதானால் இரண்டையும் நம்பத்தான் வேண்டும். இல்லையேல் இரண்டையும் நம்புவதற்கில்லை.

முதலில் இந்நாட்டில் குடியேறிய வெள்ளையர்கட்கும், அமெரிக்கா இந்தியர்கட்கும் பல பெரும் போர்கள் மூண்டன. இந்தியர்களின் ஆயுதம் வில்லும் அம்புந்தான். வெள்ளையர்கள் ஏராளமான யுத்தக்கருவிகளை ஐரோப்பாவிலிருந்து கொண்டு வந்தனர். இப்போர்களில் சில வெள்ளையர்கள் மாண்டனர். அதிகச் சேதம் அமெரிக்க இந்தியர்கட்குத்தான். ஆயிரக்கணக்கான அமெரிக்க இந்தியர்களை வெள்ளையர்கள் ஈவிரக்கமின்றிக் கொன்றதாகத் தெரிகிறது. நாட்டைப் பறிகொடுத்த அமெரிக்க இந்தி

யர்கள் எத்தனை லட்சம் பேர் வெள்ளையர்களால் கொல்லப்பட்டார்க ளென்பது ஆண்டவனுக்குத் தான் தெரியும். சமீபத்தில் வெளியான அரசாங்க அறிக்கையின்படி தற்பொழுது ஐக்கிய அமெரிக்கா வில் மட்டும் 250 பிரிவுகளைச் சேர்ந்த மூன்றரை லட்சம் இந்தியர்கள் வசிக்கின்றனர்.

பொதுவாக இந்தியர்களின் பாஷை மிகவும் பிற்போக்கானது. அமெரிக்க இந்தியனின் அகராதி யில் மிகச் சில வார்த்தைகளே காணப்படும். பல பிரிவினர் பலவிதமாகப் பேசியபோதிலும் அவர்க ளுடைய பாஷை ஒன்றுதான். நாம் பல வார்த்தை களாற் கூறும் ஒன்றை அவர்கள் ஒரே வார்த்தையில் கூறுவார்கள். உதாரணமாக, 'ஏரிக்குச் சென்று மீன் பிடிக்க' என்பது அவர்கட்கு ஒரே வார்த்தை யில் முடியும். தற்பொழுதுள்ள அமெரிக்க இந்தியர் களிற் சிலர் ஸ்பானிய பாஷை பேசுகின்றனர். இளைஞர்கள், ஆண்களும் பெண்களும், நன்கு ஆங்கி லம் பேகிசுன்றனர்.

இவ்விந்தியர்கள் நகரங்களில் வசிக்க அனுமதிக் கப்படுவதில்லை. தெற்கிலும் வடக்கிலும் தனித்த இடங்களில் (Reservation) இவர்கள் வசிக்கின்ற னர். காலின் ரோஸ் (Collin Ross) என்ற பிரபல ஜெர்மானிய எழுத்தாளர் கூறுவதுபோல, நாட்டின் வளப்பமில்லாத பகுதியொன் றிருக்குமானால் அது இந்தியர்கள் வசிக்குமிடம் என்று கொள்ளலாம்.

1540-ம் வருடத்திற்கு முன்னே இந்தியர்கள் நிலை எவ்வாறிருந்தது என்பது குறித்துப் பல ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. நியூ மெக்ஸிகோவில் புயே (Puye) என்றோர் இடமிருக்கிறது. ஆயிரம் வருடங்களுக்கு முன்னே இஃதொரு சிறந்த நகரமாகத் திகழ்ந்திருக்க வேண்டும். இப்பொழுது பாழடைந்த சின்னங்கள்தான் காணப்படுகின்றன. வட்டமாகவோ அல்லது சதுரமாகவோ நான்கு அல்லது ஐந்து மாடிகளையுடைய கட்டிடம் இருந்திருக்க வேண்டுமென்றும், பல நூற்றுக்கணக்கான அறைகள் இருந்திருக்கக் கூடுமென்றும் பாழடைந்த சின்னங்களால் தெரிய வருகின்றன. குறைந்தது ஆயிரம் பேராவது இதில் வசித்திருக்கக்கூடும். மலையுச்சியில் அழகிய ஆற்றங்கரை யோரத்திலே இந்நகர் அமைக்கப் பெற்றிருந்தது. இந்நகர் ஒரே வீடுதான். ஒரே சமயத்தில் ஒருவர் உள்ளே நுழையக் கூடியவாறு கதவு அமைக்கப் பெற்றிருந்தது. அறைகளுக்குக் கதவுகள் கிடையாது. இரண்டாவது அல்லது மூன்றாவது மாடியிலுள்ள ஓர் அறைக்கு வந்து, பின்னர் அறையின் உச்சியிலுள்ள பெருத்த துவாரத்தின் வழியாக மற்ற மாடிகளுக்குச் சென்றிருக்கக் கூடுமென்று தெரிகிறது. இக்கட்டிடத்தில் பல அந்தரங்கமான இடங்கள் இருக்கின்றன. இதற்குக் 'கீவாஸ்' (Kivas) என்று பெயர். கூட்டங்கள் நடைபெறுவது இங்குதான். பல அறைகளிலு முள்ளவர்கள் சில சுரங்கங்களின் வழியாக இங்கு வந்துசேர்வர். சுற்றித் திரியும் பல விரோதிகளிடமிருந்து தப்ப

வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன்தான் காற்றும் வெளிச்சமும் நுழையாத இக்கட்டிடங்கள் அமைக்கப்பெற்றிருத்தல் வேண்டும். இவைகளுக் கருகே யுள்ள மலைகளில் பல குகைகள். இக்குகைகளில் இந்தியர்கள் வசித்தார்கள் என்பதற்கும் பல சின்னங்கள் காணப்படுகின்றன. ஏணியின் உதவியால் இவர்கள் தங்கள் குகைவீடுகளுக்குச் சென்றார்கள். ஆபத்துக் காலங்களில் இவர்கள் பொதுக் கட்டிடத்திற்கு வந்தார்களென்றும் ஊகிக்கப்படுகிறது.

டவுஸ் (Taos) என்ற இடத்திலுள்ள இந்தியர்கள் புயோப்ளோ (Pueblo) என்ற அழகிய கட்டிடங்களில் வசிக்கிறார்கள். வடக்கு புயோப்ளோ, தெற்கு புயோப்ளோ என்ற இரண்டு நான்குமாடிக் கட்டிடங்களில் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வசிக்கின்றன. இரண்டு புயோப்ளோக்களையும் பிரிப்பது மத்தியில் ஓடும் சிறிய ஆறு ஒன்றுதான். இந்த இரண்டு வீட்டுக்காரர்களுக்கும் பல நூற்றாண்டுகளாகச் சில்லரைச் சண்டைகள் உண்டு. ஆனால் இந்தச் சச்சரவுகள் பொது விஷயங்களில் குறுக்கிடுவதில்லை. இங்கு நாள்தோறும் நூற்றுக்கணக்கான யாத்ரீகர்கள் வருகிறார்கள். முதலில் இந்தியக் கவர்னரின் பிரதிநிதி இவர்களை வரவேற்கிறார். தனிப்பட்ட நபர்களைப் படம்பிடிக்க அனுமதிக்கப் படுவதில்லை. கட்டிடங்களைப் படம் பிடிக்க கவர்னருக்கு ஒரு டாலர் கட்டணம் செலுத்த வேண்டும். இப்பணம் அவர்களின் பொதுநிதியில் சேரும். தனிப்பட்டவர்களைப் படம்பிடிக்க பத்துக் காசுமுதல்

ஐம்பது காசுவரை பணங்கொடுக்க வேண்டும். நடனங்களின்போது படம்பிடிக்க யாரும் அனுமதிக்கப்படுவதில்லை.

லூகோனு என்பது மற்றொரு இந்தியர் வசிக்குமிடம். இதொரு புதிய நகரம். ஜூனி (Zuni) என்ற இந்தியர்கள் இங்கு வசிக்கின்றனர். இவர்கள் ஏனைய சில இந்தியர்களை விடச் சிறிது முற்போக்குடையவர்கள். வடக்கேயுள்ள இந்தியர்கள் சிறந்த நிலைமையி லிருக்கின்றனர். பல பள்ளிக்கூடங்கள் அவர்களுக்கெனத் தனியாக இருக்கின்றன. நூற்றுக்கணக்கான இந்தியர்கள் தனி மோட்டார்கள் வைத்திருக்கின்றனர்.

இந்தியர்கட்குச் சொந்தமாகச் சில நிலங்கள் தான் இப்பொழுதிருக்கின்றன. ஏனைய எல்லாம் அரசாங்கத்தாராலும், வெள்ளையர்களாலும் பங்கிடப்பட்டு விட்டன. அமெரிக்க இந்தியர்கள் எவ்வித வரியும் செலுத்துவதில்லை. மோட்டார்கள் வைத்திருக்கிறார்கள். அவற்றிற்கு லைசென்ஸ் தேவையில்லை. அவர்கள் மோட்டார் ஓட்டுவதற்கும் லைசென்ஸ் அவசியமில்லை. இத்துணை மைல் வேகந்தான் போகவேண்டும் என்ற நிபந்தனையும் அவர்களுக்குக் கிடையாது. ஏதாவது தவருக நடந்தால் அவர்களுக்குத் தண்டனையுமில்லை. எவ்வளவு அதிகச் சுதந்தரம் பாருங்கள்! இந்தியர்கள், அமெரிக்கச் சரித்திரம் ஆரம்பிப்பதற்கு முன்னமேயே சிறிதளவு அரசியல் அறிவு பெற்றிருந்ததாகத் தெரிகிறது. வருடந்தோறும் நடைபெறும்

விருந்தில் தங்கள் தலைவனைத் தேர்ந்தெடுத்தனர். இத் தலைவர்கட்குக் காரியாலயமோ அன்றிச் சம்பளமோ கிடையாது. அறிவு, அநுபவம், ஆண்டு முதலிய தகுதிகளைக்கொண்டே தலைவனைத் தேர்ந்தெடுத்தனர். அவனுக்கு ஓரளவு கட்டுப்பட்டும் நடந்தனர். தற் பொழுது இந்தியக் கவர்னர்களுக்கு, காரியாலயம் காரியதரிசி, மோட்டார் முதலிய அனைத்தும் உண்டு. இக்கவர்னர் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப் பெறும் நிர்வாக சபைக்குப் பொறுப்புள்ளவராவர்.

பண்டைக்கால இந்தியர்கள் நாட்டின் பல பகுதிகளிலும் பரவியிருந்தனர். போக்குவரத்து வசதிகள் மிகக் குறைவு. ஏராளமான குதிரைகளை உபயோகித்தனர். சாலை வசதிகள் கிடையா. ஐக்கிய அமெரிக்கா மட்டும் சுமார் 30 லட்சம் சதுர மைல் கொண்டது. எனவே இந்தியர்கள் ஒருவர்க் கொருவர் அதிகத் தொடர்புடையவர்களாக இருந் திருப்பார்களென்று எண்ணுவதற்கில்லை.

அமெரிக்க இந்தியர்களின் வழக்கங்களிற் சில விசித்திரமானவை. பல பகுதியினருள்ளும் வழக் கங்கள் மாறுபட்டிருந்தன. நினைத்தபொழுது விவா கம் செய்துகொள்வார்கள். பிள்ளைகள் பிறந்தவுடன் மனைவியை விரும்பாவிட்டால், மனைவி மக்கள் எல் லோரையும் விரட்டிவிட்டுப் புதிதாக மணம் செய்து கொள்வார்கள். பழைய மனைவி மக்களைப் பற்றிச் சிந்திக்கமாட்டார்கள். அவர்களுடைய சாதாரண வாழ்க்கை, சடங்குகள் நிரம்பி இருந்தன.

ஒருவர் இறந்தால், அப்பிணத்தை இரண்டு அல்லது மூன்று நாள் வீட்டில் வைத்திருந்து நிச்சயமாகப் பிணம் என்று தெரிந்ததின்பேரில் வீட்டிற்கு முன்னாலோ அல்லது பின்னாலோ புதைப்பார்கள். புதை குழியில் பிணத்தை மூடிய பின்னர், அப்பிணத்தின் உருவம் அடங்கும் அளவில் சிறிய கட்டிடம் ஒன்றை எழுப்புவார்கள். இறந்த மனிதர் உபயோகித்த பழைய ஆடைகளை இக் கட்டிடத்தில் வைப்பார்கள். ஆறுவது நாள் இங்குச் சென்று இவ்வாடைகளைக் கொளுத்தி இறந்தவருக்குச் சில உணவுகள் படைத்து அவரைக் கௌரவிப்பதற்காக உற்றார் உறவினர்களுடன் விருந்துண்பர். இறந்தவரின் ஆத்மா இக்கட்டிடத்தில் சாந்திபெறும் என்பது இவர்களது நம்பிக்கை.

இவ்விந்தியர்கள் திடசரீரம் உடையவர்கள்; பொதுவாக அழகு வாய்ந்தவர்கள். ஆண்களும் பெண்களும் சமமாக வாழ்க்கை நடத்துகின்றனர். நவஜோ பகுதியிலுள்ள இந்தியர்கள் செல்வம் படைத்தவர்கள். இங்குள்ள இந்தியப் பெண்கள் அழகிய ஆடைகள் அணிவதிலும் விலையுயர்ந்த ஆபரணங்கள் அணிவதிலும் விருப்பமுள்ளவர்கள். சுமைதாங்கி போல ஆபரணங்களைத் தாங்க இப்பெண்கள் ஒரு சிறிதும் பின்வாங்கமாட்டார்கள். தங்கள் செல்வ நிலையை ஆபரணங்களின் மூலமாகவே இப்பெண்கள் காட்டிக் கொள்வர். இவர்களுடைய ஆபரணங்கள் வெள்ளி, செம்பு முதலிய உலோகங்களால் ஆனவை. முத்து, பவழம் முதலியவைகளும் அதிகம்.

நவஜோ இந்தியர்கள் கைத்தொழிலில் பேர் பெற்றவர்கள். பலவிதமான கம்பளங்கள் நெய்கின்றார்கள். வெள்ளியினால் பல பொருள்கள் தயாரிக்கின்றனர். 1850-ம் வருடம் மெக்ஸிகோவாசிகள் இத்தொழிலை இவர்கட்குக் கற்பித்தனர். இவர்களின் கருவிகள் மிகவும் சாதாரணமானவை. ஆனாலும் இவர்கள் திறமை பெரிதும் வியக்கத்தக்கது. அவசரமின்றி மெதுவாக இவர்கள் வேலை செய்கின்றனர். அவ்வேலையின் தன்மையையும் இவர்கள் நன்குணர்கின்றனர். புயோப்ளோ இந்தியர்கள் பானை சட்டிகள் செய்வதில் புகழ் பெற்றவர்கள்.

இந்தியர்களிற் பெரும்பாலோர் தற்பொழுது கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள். இவர்கள் வசிக்குமிடங்களிலே இவர்களுக்கெனத் தேவாலயங்கள் அமைக்கப் பெற்றிருக்கின்றன. ஆனால் இவர்கள் பெயரளவில்தான் கிறிஸ்தவர்களா யிருக்கின்றனர். தங்களுடைய பழைய கடவுள்களைப் பூசிப்பதற்கு இவர்கள் மறப்பதில்லை. மூட நம்பிக்கைகளும் இவர்களை விட்டபாடில்லை. அந்நியர்கள் யாரும் நுழையாத அந்தரங்க இடங்களிலே இவர்கள் கூடித் தங்கள் தேவதைகளைப் பூசித்து விருந்துண்டு நடனமாடிக் களிப்பார்கள். இவர்களுடைய நடனங்கள் மிகவும் பேர்பெற்றவை. மான், எருமை, கரடி போன்ற மிருகங்களின் தலைகளை மாட்டிக்கொண்டு இவர்கள் நடனமாடுவது வேடிக்கையாகவும் கவர்ச்சியுள்ளதாகவும் இருக்கும். இளைஞர்கள் சந்தோஷமாக ஓரிடத்தில் கூடிவிட்டால், மணிக்கணக்காக, சில

சமயங்களில் இரவு முழுதும், ஆடிக்கொண்டும் பாடிக் கொண்டும் பொழுது போக்குவார்கள்.

பொதுவாக இவர்கள் நல்ல சுபாவமுடையவர்கள். மற்றவர்களோடு அதிகமாகக் கலந்து பழக மாட்டார்கள். நகைச்சுவை குறைவு. சமூகக் கட்டுப்பாட்டை மீற மாட்டார்கள். இவர்களுக்குள் நேரும் சண்டை சச்சரவுகளை நிர்வாகசபையார் மூலம் தீர்த்துக் கொள்வார்கள்.

பொதுவாக அமெரிக்கர்கள், மற்ற வெள்ளையர்களைவிடப் பரந்த நோக்கமுடையவர்கள். இந்தியர்களை முன்னேறச் செய்வதற்குக் கூடியவரை முயற்சி செய்கின்றனர். தற்பொழுது இந்தியர்களின் பிறப்பு விகிதம், வெள்ளையர்களைவிட, நீக்ரோக்களைவிட அதிகமாகி வருகிறது. வடக்குப் பகுதியில் சில இந்தியர்கள் நகரங்களில் வேலை பார்க்கின்றனர். இந்தியர்கள் சுதந்தரமுடையவர்கள் தான். என்றாலும் நாளடைவில் மற்றத் தடைகளினின்று விடைபெற்று ஐக்கிய அமெரிக்காவின் பிரஜைகளாகிப் பூரண உரிமை பெறும் நாள் விரைவில் தோன்றக்கூடும். ஆனால் ஒன்று: வெள்ளையர்கள்—அவர்கள் யாராயிருப்பினும் சரி, வெள்ளையரல்லாதவர்களின் நன்மையை உண்மையில் விரும்புவார்களா வென்பது சந்தேகிக்கக் கூடிய விஷயந்தான். எனினும், இந்நாட்டைப் பண்படுத்தி உலகிற் சிறந்த நாடுகளில் ஒன்றாகச் செய்த அமெரிக்கர்கட்கு இந்தியர்கள் என்றும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

குறிப்பு :—'இந்தியர்கள்' என்று இக்கட்டுரையில் குறிப்பிடப்படுவது 'அமெரிக்க இந்தியர்கள்' அல்லது 'சிவப்பு இந்தியர்களை'யே குறிக்கும்.

# 6. அயர்லாந்தில் மூன்று நாட்கள்

அயர்லாந்து! சுதந்தர அயர்லாந்து! இந் நாட்டைப் பார்க்கவேண்டுமென்ற ஆவல் பன்னெடு நாட்களாக என்னுள்ளத்தில் குடிகொண்டிருந்தது. 1937-ம் வருஷம் அக்டோபர் மாதக் குளிரில் காலை மூன்று மணிக்கு டப்ளின் துறைமுகத்தைச் சேர்வேனென்று நான் கருதவில்லை. முன்பின் தெரியாத ஊரில் காலை மூன்று மணிக்கு இறங்குவது நல்ல அநுபவமல்லவா! ஆனால் சுங்க (Customs) அதிகாரிகள் எத்தகைய தொந்தரவையும் கொடுத்தார்களில்லை. ஐந்து நிமிஷத்தில் சோதனை முடிந்தது. சாமான்களைப் பரிசோதித்துக் காலத்தைப் போக்குவதைவிட, பிரயாணிகளின் வார்த்தைகளை நம்புவது நல்லது என்று கருதுகின்றார்கள் ஐரிஷ் சுங்க அதிகாரிகள். பாவம், அவர்களும் மனிதர்கள்தானே! வீடு வாசல், மனைவி மக்கள் அவர்களுக்கும் உண்டல்லவா?

கப்பல் அகாலத்தில் வந்தால் 'டாக்ஸி' டிரைவர்களுக்குத் தான் கொண்டாட்டம். 'டாக்ஸி' டிரைவர்கள், அவர்கள் எந் நாட்டினராயிருந்த போதிலும் சரி, 'ஒரே ஜன்மந்தான்.' இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் 'நியாயம்', 'மனிதத் தன்மை' முதலியவைகட்கும் இவர்கட்கும் வெகு தூரம். பிரயாணம் செய்யும் குற்றத்தை மேற்கொண்டவர்கள் இக்

'கொள்ளைக்' கூட்டத்தினரிடம் தண்டனை யடைவது நிச்சயம்!

புதிதாக ஒரு நகருக்குச் சென்றதும் அதனைச் சுற்றிப்பார்க்க வேண்டுமென்ற ஆர்வமுண்டாவது இயற்கை. நகரக் காட்சிகளைக் கண்டுகளிக்கப் பகலிலும் இரவிலும் நடந்து செல்வதுதான் சிறந்த முறை. இந்த முறையை லண்டன், நியூயார்க் போன்ற நகரங்களில் கையாளுவது மிகவும் சிரமமான காரியம். ஆனால் அயர்லாந்தின் தலைநகரான டப்ளின் சுமார் ஐந்து லட்சம் ஜனங்களைக் கொண்ட அழகிய சிறு நகரம். அயர்லாந்தின் மொத்த ஜனத்தொகை சுமார் 30 லட்சம். இதில் வட அயர்லாந்தைச் சேர்ந்த சிறு பகுதி பிரிட்டிஷ் நிர்வாகத்திலிருக்கிறது. மற்றப் பகுதிகள் ஐரிஷ் ப்ரீ ஸ்டேட்ஸ் (Irish Free States) என்றழைக்கப் படுகின்றன. இதன் தலைநகர்தான் சரித்திரப்பெருமை வாய்ந்த டப்ளின் (Dublin) நகரம்.

ஐரிஷ் மக்கள் இந்தியர்களைப் பற்றி எத்தகைய நல்லபிப்பிராயம் கொண்டுள்ளார்களோ, அதைப் போன்றே இந்தியர்களாகிய நாமும் ஐரிஷ் மக்களைப் பற்றி நல்லபிப்பிராயம் கொண்டுள்ளோம் என்பதில் ஐயமில்லை. அவர்களுக்கும் நமக்கும் பொதுவான விஷயங்கள் பல உண்டல்லவா? அவர்கள் சுதந்தரப் போரில் வெற்றி பெற்றுவிட்டார்கள்; நாமும் விரைவில் வெற்றிபெறப் போகிறோம். எதிர்காலத்தில்

இவ்விரு சுதந்தர நாடுகளுக்கும் நெருங்கிய தொடர்பிருக்குமானுல் ஆச்சரியப் படுவதற்கில்லை.

டப்ளின் நகருக்கு நடுவே செல்லும் ஆறு, போக்குவரத்து வசதிக்கு மிகவும் சௌகரியமானது. ஆற்றின் குறுக்கேயுள்ள பாலங்கள் ஒரே மாதிரியாக அமைக்கப் பெற்றுள்ளன. இரு கரைகளிலுமுள்ள வீடுகளின் தோற்றம் ஆற்றுத் தண்ணீரில் தலைகீழாகத் தோன்றுவது மிகவும் அழகிய காட்சி! நகரின் பிரதம வீதியில் பல சித்திர வேலைப்பாடமைந்த சிலைகளும், ஜய ஸ்தம்பங்களும் அமைக்கப் பெற்றுள்ளன. தற்பொழுது அயர்லாந்து பாங்க் உள்ள கட்டிடம் பழைமையும் வனப்பும் வாய்ந்த ஒன்று. இது முன்னர் பார்லிமெண்டுக் கட்டிடமாக இருந்தது. டப்ளின் சர்வகலாசாலை, டிரினிடி காலேஜ் முதலியவை ஊருக்கு நடுவே யுள்ளன. இங்கு இப்பொழுது சுமார் பத்து இந்திய மாணவர்கள் பயிற்சி பெறுகின்ருர்கள்; பெரும்பாலோர் மருத்துவத்துறையில்.

நகரைச்சேர்ந்தும், நகருக்கு அருகேயுமுள்ள சிறு கிராமங்களில் அழகும் அமைதியும் குடிகொண்டிருக்கின்றன. பெரும்பாலான மக்கள் இங்கிருந்து வேலை பார்க்க; நகருக்குச் செல்கின்றனர் மாலை நேரத்தில் வீடு திரும்புகின்றனர். மிகவும் நாகரிக வசதி நிறைந்த 'மோட்டார் பஸ்'கள் இங்கு ஏராளம். ஆனுல், கட்டணம் சிறிது அதிகம். பெரும்பாலோர் டிராம் வண்டிகளையே உபயோகிக்கின்றனர். ஆனுல், டிராம்

வண்டி செல்லாத இடங்களுக்கு இந்த 'பஸ்'களைத் தவிர வேறு வகையில்லை.

பீனிக்ஸ் பார்க் (Phoenix Park) என்பது ஐரோப்பாவிலேயே மிகவும் பெரிய 'பார்க்'. இது டப்ளின் நகருக்கு அணித்தேயுள்ளது. ஐரிஷ் மக்களின் நேர்மையை விளக்குவதே போன்று இந்தப் 'பார்க்'கின் மத்திய ரோடு எவ்வித வளைவுகளுமின்றிப் பல மைல் தூரம் நேராக அமைந்திருக்கிறது. தனிமையின் இனிமையை விரும்பும் பலர் செடிகள் மறைவிலே நாற்காலிகளில் படுத்துக்கொண்டு பத்திரிகைகள் படிப்பார்கள். புன்முறுவல் தவழும் ஐரிஷ் குழந்தைகள் விளையாடுவதற்குச் சில பகுதிகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. மருண்ட பார்வையுடைய மான்கள் பல அங்கு மிங்கும் ஓடிக்கொண்டிருக்கும். இந்தப் பார்க்கின் ஒரு கோடியில் மிருகக் காட்சி சாலை. யானைகளைக் கண்டால் சாதாரண ஐரிஷ்காரர்கள் எவ்வளவு ஆச்சரியப்படுகின்றனர்! அவர்களுக்கு யானை ஒரு விநோதப் பிராணி!

கூட்டமும் இரைச்சலும் சேர்ந்த நகருக்கு மத்தியில் இப்பொழுது செல்வோம். முதலாவது பத்திரிகை விற்கும் பையன்களிடமிருந்து தப்புவது கடினம். தொந்தரவு கொடுக்கமாட்டார்கள்; ஆனால் ஒவ்வொரு பையனும் உங்களுக்குத் தன்னுடைய பத்திரிகையை விற்க முயற்சி செய்வான். டப்ளின் நகரில் மட்டும் சுமார் பத்து தினசரிப் பத்திரிகைகள்

வெளியாகின்றன. இவைகளின் விலை ஒரு பென்னி. சில பத்திரிகைகள் மட்டும் இரண்டு பென்ஸ். இவைகளிற் சில பத்திரிகைகள் மிகச் செல்வாக்குள்ளவை. டேய்லி வோர்க்கர் (Daily Worker) போன்ற பிரிட்டிஷ் தினப்பத்திரிகைகளும் இங்கு விற்கப்படுகின்றன. ஆனால் ஐரிஷ் அரசாங்கம் பிரிட்டிஷ் பத்திரிகைகட்கு அதிகமான சுங்கவரி விதிக்கின்றது. ஐரிஷ் பத்திரிகைகள் சிறந்த முறையில் அமைக்கப்பெற்றிருக்கின்றன. விஷயங்களை விரைவில் வெளியிடுவதில் இவை அதிகக் கவலை செலுத்துகின்றன. ஐரிஷ் பத்திரிகைக்கு, அதன் முக்கிய வருமானங்களில் ஒரு பகுதி, பத்திரிகையில் வெளியாகும் படங்களின் பிரதிகளை விற்பனை செய்வதால் கிடைக்கிறது.

சில நல்ல ஹோட்டல்கள் டப்ளின் நகரில் உண்டு. ஆனால் பெரும்பாலான ஹோட்டல்கள் நடுத்தர முள்ளவைகள். உணவுச் சாலைகள் (Restaurants) பல. ஒவ்வொரு சினிமா தியேட்டரும் தன் சொந்த உணவுச்சாலைகளை ஏற்படுத்தி யிருக்கின்றது. தற்பொழுது அயர்லாந்தில் உணவுப் பொருள்களின் விலை மிக அதிகம். பகற் சாப்பாடு இரண்டு ஷில்லிங். வேலைக்காரருக்கு (Tips—'டிப்ஸ்') மேல் வருமானம் மூன்று பென்ஸ். அதாவது ஏறக்குறைய ஒன்றே முக்கால் ரூபாய். இது ஒரு நடுத்தரமான உணவுச் சாலையில்! பொதுவாக, இந்த உணவுச் சாலையில் சுகாதார வசதி போதாது. ஐரிஷ்

வேலைக்காரப் பெண்கள் சுறுசுறுப்புள்ளவர்கள்; எப்பொழுதும் நகைமுகத்துடன் தோன்றுவர்; இல்லையென்று கூறுவதையும் இனிமையாகக் கூறுவர்.

ஐரிஷ் மக்கள் அதிக நகைச்சுவை யுடையவர்கள். துன்பமடைய நேர்ந்தாலும் அதிலும் நகைச் சுவை காண்பார்கள். வண்ணான்—வண்ணாத்தி தமாஷல்ல! அறிவுக்கும் விருந்தளிக்கும் நகைச்சுவை அது. இத்தகைய நாடகமொன்றைப் பார்ப்பதற்காக ஆபே (Abbey) தியேட்டருக்குச் சென்றேன். இந்தத் தியேட்டர் உலகப்பிரசித்தி பெற்றது. மிகச் சிறந்த நடிகர்களை அயர்லாந்தில் உற்பத்தி செய்தது இந்தத் தியேட்டர்தான். இதனுடைய சிறிய கட்டிடத்தைக் கண்டதும் வியப்புற்றேன். இரவு 8-15க்கு நாடகம் ஆரம்பம் என்று விளம்பரப்படுத்தப் பட்டிருந்தது. இரவு 7-40 வரை கதவு திறக்கப் பெறவில்லை. எத்தகைய வெளிச்சமுமில்லை. 7-45 மணிக்குக் கதவைத் திறந்தார்கள். இரண்டே வேலைக்காரர்கள்தான். குறிப்பிட்டபடி 8-15க்கு நாடகம் தொடங்கப் பெற்றது. தியேட்டரில் சோடா, சாக்லெட், மணிலாக்கொட்டை முதலியவைகளை விற்பனை செய்வோர் இல்லாதது கண்டு பெரிதும் சந்தோஷமடைந்தேன். ஆசனங்கள் மிகவும் சிறிதாகவும் வசதியில்லாததாகவும் இருந்தன. நாடகத்தைப் பார்ப்பதில் கவனம் சென்றமையால், ஆசனங்களைக் குறித்து நான் கவலை கொள்ளவில்லை. நாடகத்தின் பெயர் 'பாயிட்ஸ்

ஷாப்' (Boyd's Shop) என்பது. அதாவது ஒரு சிறிய வியாபார நிலயத்தில், சிலர் எவ்வாறு வீண்பேச்சு பேசுகிறார்கள் என்பதையும், அனுபவமில்லாத ஓர் இளைஞன், புத்தகப் படிப்பு ஒன்றின் துணைகொண்டு ஆரம்பித்த வியாபார நிலயத்தால் எவ்வாறு வீழ்ச்சியுற்றானென்பதையும் இன்னும் சில உலக நிகழ்ச்சிகளையும் நன்கு விளக்கிற்று. நான்கு அங்கங்களைக் கொண்ட இச்சிறு நாடகத்தில் ஐரிஷ் மக்களுக்கு இயற்கையான நகைச்சுவை ததும்பியிருந்தது என்று கூற வேண்டுவதில்லை. ஐரிஷ் மக்களுக்குச் சினிமாப் பைத்தியம் இருந்தபோதிலும் நாடகக் கலையை அவர்கள் பெரிதும் ரஸிக்கின்றார்கள். ஐரிஷ் நாடகக் கலையைக் குறித்து ஒவ்வொரு ஐரிஷ்காரனும் பெருமையடைகின்றான். இந்தப் பழமையான தியேட்டருக்கு அரசாங்கத்தார் வருடந்தோறும் பொருளுதவி செய்கின்றனர்.

அழகிய, வசதியான சினிமாத் தியேட்டர்கள் பல இப்போது டப்ளினில் உள்ளன. இந்நகரில் முதன் முதலாகக் கட்டப் பெற்ற சினிமாத் தியேட்டருக்குச் சென்றேன். ஒரு ஜன்னல் கூட இல்லாத தியேட்டர் இது. இந்த லட்சணத்தில், ஜனங்கள் சிகரெட்டு, சுருட்டு முதலியன உபயோகிக்கவும் அநுமதிக்கப் படுகின்றனர். புதிய தியேட்டர்களில் ஒரு படமும், செய்தியும், மேடைக் காட்சியும் (Stage Show) காண்பிக்கப்படுகின்றன. பிற்பகல் இரண்டு மணி

முதல் இரவு 11 மணிவரை படம் காண்பிக்கின்றனர். பெரும்பாலும் அமெரிக்கப் படங்கள்தான். சில பிரிட்டிஷ் படங்களும் காண்பிக்கப் படுகின்றன. 'ஐரிஷ் மூவிடோன் நியூஸ்' என்ற செய்திப் படமும் காண்பிக்கப்படுகிறது. இது அயர்லாந்தில் தயாரிக்கப்படுவதல்ல; ஐரிஷ்காரர்களால் தயாரிக்கப்படுவதுமல்ல. அமெரிக்க மூவிடோன் கம்பெனியின் தொடர்பு பெற்றுள்ள பிரிட்டிஷ் மூவிடோன் கம்பெனிப் படங்களின் மறுபெயரே ஐரிஷ் மூவிடோன் என்பது. பெயரைப்பற்றிப் பிரிட்டிஷ் வியாபாரிகளுக்குக் கவலையில்லை. அவர்கள் வேண்டுவது என்ன? பவுன்தான்.

அயர்லாந்து சுதேசக் கைத்தொழில்களை விருத்தி செய்ய முயலுகிறது. 'ஐரிஷ் சாமான்களையே வாங்குங்கள்' என்ற சுலோகம் எங்கும் கேட்கப்படுகிறது. சில வியாபார ஸ்தலங்கள் ஐரிஷ் சாமான்களை மட்டுமே விற்பனை செய்கின்றன. சுதேசச் சாமான்களின் விலை அதிகமாயிருந்தபோதிலும் அதனையே உபயோகிக்க விரும்புகின்றனர் பல ஐரிஷ்காரர்கள்.

கல்வித் துறையில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்துகிறது. நாட்டுப்பற்றை வளர்க்கும் வகையில் கல்விமுறை அமைக்கப்பட்டிருக்கிறது. கல்வி நிலயக் கட்டிடங்கள் மிக நாகரிக முறையில், சுகாதார வசதிப்படி கட்டப்பெற்றிருக்கின்றன. கட்டாயக் கல்வி முறை அமுலிலிருக்கிறது. ஐரிஷ் மக்கள்

மிகவும் சுதந்தர உணர்ச்சி யுடையவர்கள். அவர்கட்குள் ஆயிரம் பிளவுகளிருக்கலாம். ஆனால் அவர்களின் லட்சியம் ஒன்றே; அதாவது அந்நியரிடமிருந்து நாடு விடுதலை பெறவேண்டும். சில நூற்றாண்டுகளில் இவ் விடுதலைப் போர் அவ்வப்போது நிகழ்ந்தது. ஆனால் 1916-ல் அயர்லாந்து அதிக கஷ்ட நஷ்டங்களை யடைய நேர்ந்தது. இளங் கொழுந்துகளான ஐரிஷ் வாலிபர்கள் பிரிட்டிஷாரின் துப்பாக்கிக் குண்டுகட்கு இரையாயினர். பிரிட்டிஷாரால் யார் கைதிகளாக்கப் பெற்றுக் கொடுமையாக நடத்தப் பட்டார்களோ, அவர்களே இப்பொழுது அயர்லாந்தை ஆளுகின்றார்கள்.

அயர்லாந்தின் தலைவர் டிவாலராவைப் பற்றி இந்தியர்கள் நன்கறிவர். இவர் இப்பொழுது மூன்றுவது முறையாகத் தலைவர் பதவி வகிக்கிறார். இவருடைய வாழ்க்கை வெகு ரஸமானது; பல சம்பவங்கள் நிறைந்தது. அயர்லாந்தின் நன்மை யொன்றே இவருடைய கனவு; இவருடைய லட்சியம். இதற்காகத் தியாகம் செய்தவர் இவர். அதிகாரத்தில் இருந்த போதிலும் இவர் சாதாரண மனிதராகவே நடந்து கொள்கின்றார். காட்சிக்கு மிக எளிமையானவர். கத்தோலிக்கப் பாதிரிகளின் செல்வாக்கு நிறைந்த அயர்லாந்திலே, பிளவுகளும் சச்சரவுகளும் நிறைந்த அயர்லாந்திலே, இவர் பெரும்பாலோரின் நம்பிக்கையைப் பெற்று ஆட்சிசெலுத்துகின்றார். இந்தியாவிடத்திலும் காந்தியடிகளிடத்திலும் இவருக்கு

மாரூத அன்புண்டு. காலஞ்சென்ற ஸ்ரீமான் வி. ஜே. பட்டேலும், ஸ்ரீமான் சுபாஷ் சந்திர போஸும் இவருடைய விருந்தினர்களாகத் தங்கியிருந்தனர்.

அயர்லாந்தைக் குடியரசு (Republic) நாடாகச் செய்யவேண்டு மென்பது இவருடைய கொள்கை. சுதந்தர நாடாக (Free State) இருப்பதே போதுமானது என்பது எதிர்க்கட்சியார் கொள்கை. ஐரிஷ் பார்லிமெண்டுக்கு (Dail) என்று பெயர். இதன் மொத்த அங்கத்தினர்கள் 138. டிவாலராவின் கட்சியைச் சேர்ந்தவர் 69. எதிர்க்கட்சியினர் 56. தொழிற் கட்சியினர் 13. எதிர்க் கட்சியும் தொழிற்கட்சியும் சேர்ந்தால் 69 ஆகிறது. எனவே தொழிலாளர் கட்சிதான் சூத்திரக் கயிற்றைப் பிடித்துக் கொண்டிருக்கிறதென்று சொல்லவேண்டும். தொழிற்கட்சி எதிர்க் கட்சியுடன் சேர்ந்துகொண்டால் அரசாங்கக் கட்சி, சட்டம் செய்வதற்குத் தலைவருடைய விசேஷ ஓட்டை எதிர்பார்க்க வேண்டியதிருக்கிறது. சென்ற தேர்தலில் டிவாலராவுக்குப் பெரும் செல்வாக்கு ஏற்படவில்லையென்றாலும், அயர்லாந்தில் அதிகச் செல்வாக்குள்ளவர் டிவாலராதான் என்பதில் ஐயமில்லை. இவருடைய தியாகமும், நேர்மையும், சுதந்தர உணர்ச்சியும் அயர்லாந்தைச் சிறந்த நாடாகச் செய்யுமென்று பல ஐரிஷ் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

ஐரிஷ் பாஷை, பள்ளிக்கூடங்களில் கட்டாய பாடமாக்கப்பட் டிருக்கிறது. பெரியவர்கட்கு

ஐரிஷ் பாஷை தெரியாது. ஆனால் புதிய தலைமுறை ஐரிஷ் பாஷை பேசுகிறது. பொதுவாக நாடகம், பத்திரிகை, சம்பாஷணை எல்லாம் ஆங்கிலத்தில் தான். ரோடுகள், கட்டிடங்கள் முதலியவைகளின் பெயர்கள் ஐரிஷ், ஆங்கிலம் ஆகிய இரு பாஷைகளிலும் எழுதப் பெற்றுள்ளன.

ஐரிஷ் நாணயமும் பிரிட்டிஷ் நாணயமும் ஒரே மதிப்புள்ளவைதான் ; ஆனால், இரண்டுக்கும் வித்தியாசமுண்டு. இரண்டுவிதமான நாணயங்களையும் இங்கு உபயோகிக்கின்றார்கள்.

அயர்லாந்து எதிர்காலத்திற் குடியரசாக ஆகுமா என்பது சிறிது காலத்தில் தெரிந்துவிடும். டப்ளின் நகரத்தில் 'வெறும்' மூன்று நாட்கள் தங்கி விட்டு அயர்லாந்தைப் பற்றி நான் என்ன எழுதக்கூடும்? வாழ்க சுதந்தர அயர்லாந்து !

# 7. பின்லந்தில்

ஸ்வீடனின் தலைநகரான ஸ்டாக்ஹோமிலிருந்து அழகிய ஒரு சிறுகப்பலில் பின்லந்துக்குப் பிரயாண மானேன். இரவு ஏழுமணிக்குக் கப்பல் புறப் பட்டது. கப்பல் நிறையப் பிரயாணிகளிருந்தனர். அவர்கள் பல பாஷைகளில் பேசினார்கள். அவை களில் ஒன்றுகூட எனக்கு விளங்கவில்லை.

கப்பலில் நான் அங்கும் இங்கும் செல்லும் பொழுதெல்லாம் பிரயாணிகள் என்னை உற்று நோக் கினர். இரவு 9 மணிக்குக் கப்பலில் சாப்பிடும் இடத்திற்குச் சென்றேன். அங்கு மத்தியில் ஒரு பெரிய மேஜை இருந்தது. அதில் சுமார் இருபது விதமான சூடு இல்லாத உணவு வகைகள் பெரிய பிளேட்டுகளில் பரப்பப்பட்டிருந்தன. பிரயாணி கள் அங்கிருந்த பிளேட்டுகளில் ஒன்று, கத்தி, போர்க் முதலியவைகளை எடுத்துக்கொண்டு மேஜையைப் பிரதட்சணம் வந்தனர். இக்காட்சி மிகவும் வேடிக்கையாக இருந்தது. பிரதட்சணம் வரும்பொழுது தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை எடுத்துக்கொண்டு தங்களிடத்திற்குச் செல்லுவார்கள். இம்மாதிரி எத்தனை முறை வேண்டு மானாலும் பிரதட்சணமாக வந்து தங்களுக்கு வேண்டிய உணவுப்பொருள்களை எடுத்துக் கொள்ள

லாம். இதுமட்டுந்தான் சாப்பாடு என்று நினைக்கா தீர்கள். இது முடிந்ததும் வழக்கப்படி பல உணவுகளை வேலைக்காரிகள் பரிமாறுவார்கள்.

இரவு பன்னிரண்டரை மணி. சிறுதீவு ஒன்றில் கப்பல் சில நிமிஷங்கள் தங்கிற்று. இதுதான் நாம் பத்திரிகைகளில் படிக்கும் ஓலண்டு (Oland).

மறுநாள் காலையில் பின்லந்தைச் சேர்ந்தோம். ஆபோ (Abo) என்னும் துறைமுகத்தில் இறங்கினோம். பின்லந்திலுள்ள இரண்டாவது பெரிய துறைமுகம் ஆபோதான். இதனை (Turku) தூர்கு என்றும் கூறுவார்கள்.

இங்கிருந்து ஹெல்சிங்கிக்கு ரயிலில் சென்றேன். சுமார் நான்கு மணிநேரம் பிரயாணம். ரயிலில் சாப்பிடுமிடத்தில் ஒருபெண் எனக்குக் காலை ஆகாரம் கொடுத்தாள். அவளிடம் நான் கப்பலில் கற்றுக் கொண்ட சில (Finnish) பின்னிஷ் வார்த்தைகளைத் தைரியமாக—ஆனால் தப்பும் தவறுமாகக்—கூறினேன். அதற்கவள் தான் பின்னிஷ்பெண் அல்லவென்றும், ஸ்வீடிஷ் பெண் என்றும், கரையோரத்தில் வசிப்பவர்கட்கு (Finnish) பின்னிஷ் பாஷையே தெரியாதென்றும் அரைகுறையான ஆங்கிலத்தில் கூறினாள்.

மைனாரிட்டி பிரச்னை இந்தியா ஒன்றில்தான் அதிகம் என்று நினைத்திருந்தேன். ஆனால் பின்லந்திலும் இப்பிரச்னை மிகப்பெரிதாகவும், முக்கியமான

தாகவும் இருக்கிறது. இந்த மைனாரிட்டி பிரச்னை பின்னிஷ் மக்கள் சுதந்தரம் பெற்றதை எந்த விதத்திலும் தடுக்கவில்லை.

ரயில் ஹெல்சிங்கியை அடைந்தது. ஸ்டேஷன் மிக்க சுத்தமாகவும், அழகாகவும் இருந்தது. பின்லந்தில் பார்க்கவேண்டிய முக்கியமானவைகளுள் ஹெல்சிங்கி ரயில்வே ஸ்டேஷனின் கட்டிடமும் ஒன்று. இக்கட்டிடத்தின் அமைப்பும் வனப்பும் பின்லந்துக்கே சிறப்பானது. ரயில்வே ஸ்டேஷனில், வெளிநாட்டு யாத்ரீகர்கட்கு உதவிசெய்வதற்காக ஒரு காரியாலயம் இருக்கிறது. அங்குள்ளவர்கள் மிக அன்பாக உபசரித்து உதவிகள் செய்கின்றனர்.

நேராக ஒரு ஹோட்டலுக்குச் சென்றேன். முன்னரே நான் அறிவிக்காமலிருந்ததால், ஹோட்டல் மானேஜர் என்னைக் கண்டு ஆச்சரியப்பட்டார். அன்றுகாலையில் ஒரு ‘கறுப்பு மனிதன்’ தனது ஹோட்டலுக்கு வரக்கூடும் என்று அவர் கனவிலும் நினைத்திருக்க மாட்டார்.

ஹோட்டல் மானேஜர் என்னை மேன்மாடிக்கு அழைத்துச் சென்று, ஓர் அறையைக் காண்பித்தார். ஹோட்டலுக்குள் நான் நுழைந்த உடனேயே ஒரு பரபரப்பு உண்டாயிற்று. ஹோட்டலில் தங்கியிருந்த பெண்களும், ஹோட்டல் வேலைக்காரப் பெண்களும், ஜன்னல் வழியாகவும், மூலை முடுக்கு

களில் நின்றுகொண்டு மறைவாகவும் எனது தரிசனத்திற்குக் காத்துக்கொண்டு நின்றனர். சில வேலைக்காரப் பெண்கள் ஓடி ஒளிந்து கொள்வார்கள். இக்காட்சி மிகவும் சுவாரஸ்யமாக விருந்தது.

ஹோட்டலில் தங்கிய 48 மணி நேரத்திற்குள் நான் பழைய மனிதனாகி விட்டேன். ஆனால் வீதியில் செல்லும்பொழுதெல்லாம் உருண்டை முக பின்னியர்கள் என்னை ஆச்சரியத்தோடு பார்த்தனர்.

ஹெல்சிங்கி மிகவும் அழகான நகரம். இரண்டரைலட்சம் ஜனத்தொகையுள்ள இந்த நகரத்திலே குடிசைகளோ, குட்டிச்சுவர்களோ கிடையா. உலகத்திலேயே இம்மாதிரியான நகரம் இது ஒன்றுதான் என்று கூறுகின்றனர். எல்லாம் புத்தம்புதிய கட்டிடங்கள். மூன்று முக்கியமான கட்டிடங்களைக் குறிப்பிடலாம்: பார்லிமெண்டு, போஸ்டாபீஸ், ரயில்வே ஸ்டேஷன். இதில் பார்லிமெண்ட் கட்டிடம் மிக நன்றாக இருக்கிறது. எத்தனையோ தேசங்களிலுள்ள பார்லிமெண்டுக் கட்டிடங்களைவிட, இக்கட்டிடம் கம்பீரமாகவும் வசதியுள்ளதாகவும் இருக்கிறது.

பின்லந்து ஒரு குடியரசு. தலைவர் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப் படுகிறார். பார்லிமெண்டில் இரண்டு சபைகள் கிடையா. ஒரே ஒரு சபைதான். இந்தப் பார்லிமெண்டில் தற்பொழுது ஆறு கட்சிகளிருக்

கின்றன. விவசாயிகள் கட்சியும், தொழிலாளர் கட்சியும்தான் முக்கியமானவை. ஸ்வீடிஷ் மைனு ரிட்டிகளின் கட்சியொன்று இருக்கிறது. கன்சர் வேடிவ், லிபரல், சோஷியலிஸ்ட் கட்சிகளும் இருக் கின்றன.

பின்லந்து பல வருடங்களாக ரஷ்யாவின் ஏகாதி பத்தியத்தில் இருந்தது. சுமார் 20 வருடங்களாகத் தான் அது ஒரு சுதந்தர நாடாக இருக்கிறது. பின்னி யர்கள் ரஷ்யர்களேயும், பொதுஉடைமைக்கொள்கை களேயும் வெறுக்கின்றனர். "உலகத்திலே, ரஷ்யா ஒன்றைத்தவிர மற்றெல்லாத் தேசங்களேயும், மற் றெல்லா மக்களேயும் நாங்கள் நேசிக்கிறோம். ரஷ் யர்கள் பின்லந்தைவிட்டுச் சென்றுவிட்டனர். இந்த நாட்டில் அவர்கள் விட்டுவிட்டுப் போனது இரண்டு ரஷ்ய தேவாலயங்கள்தான்" என்று ஒரு பின்னிஷ் ப்ரொபசர் கூறினர்.

ஸ்காண்டிநேவியா என்று சொல்லப்படுகிற நான்கு நாடுகளில் பின்லந்தும் ஒன்று. ஆனல் மற்ற மூன்று நாட்டினர்களான நார்வீஜியர்கள், ஸ்வீடிஷ் காரர்கள், டேனிஷ்காரர்கள் ஆகியோர் பின்லந்தைப் பூகோள முறைப்படிதான் ஸ்காண்டிநேவிய நாடா கக் கொள்கின்றனர். பின்லந்தைத்தவிர மற்ற மூன்று தேசத்தினர்களும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள். பின்னிஷ்காரர்களின் உருவம், பாஷை, பழக்க வழக்கம் எல்லாமே மற்றவர்களிடமிருந்து வித்தி

யாசப் படுகின்றன. பின்னிஷ்காரர்கள் வெள்ளைக் காரர்கள் அல்லரென்றும் பிரசாரம் செய்யப்படு கிறது. பின்னிஷ்காரர்கள் (Slovak) ஸ்லோவக் என்றவகுப்பைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறப்படு கிறது. பின்னிஷ்காரர்கள் நல்ல வெள்ளை நிறமுடைய வர். எல்லோரும் உருண்டை முகத்தினர்; செம்பட்டை மயிரினர்.

பின்னிஷ் தேசத்தின் நாணயம் பின்னிஷ் மார்க் என்பது. பவுனுக்கு 227 மார்க்கு. ஒரு ரூபாய்க் குச் சுமார் 17 மார்க்கு. சாமான்களின் விலை யெல்லாம் மலிவு. யாத்ரீகர்கள் குறைவான செல விலே பிரயாணம் செய்யக்கூடிய நாடுகளில் பின்லந் தும் ஒன்று.

ஒலிம்பிக் மட்டும் நடக்குமானால், ஏழை நாடான பின்லந்தின் பொருளாதார நிலை சிறிதளவு உயரும். ஒலிம்பிக் என்ற பெயரே இப்பொழுது அதிர்ஷ்ட மில்லா திருக்கிறது. ஒலிம்பிக் நடத்திய ஜெர்மனி சண்டையில் இறங்கி யிருக்கிறது. ஒலிம்பிக் நடத்த ஏற்பாடு செய்த ஜப்பான், சீனச்சண்டையில் இறங் கிற்று. ஒலிம்பிக் ஏற்பாடுகளை யெல்லாம் முடித்துத் தயாராக இருந்த பின்லந்து இப்பொழுது தனது சுதந்தரத்திற்காகப் போராடுகிறது. இந்த ஒலிம்பிக் இப்பொழுது வேறு எந்த நாட்டிற்குப் போகப் போகிறதோ தெரியவில்லை.

பின்லந்தில் 63 ஆயிரம் ஏரிகள் இருப்பதாகக் கூறுகின்றனர். அதே கணக்குப்படிதானே என்னவோ 63 ஆயிரம் மக்கள் உட்காரும்படி வசதியுள்ள ஒலிம்பிக் ஸ்டேடியத்தை அமைத்தனர். இந்த ஸ்டேடியத்தில் ஹெல்சிங்கியிலுள்ள ஜனத்தொகையில் நான்கில் ஒரு பங்கினர் உட்காரலாம்.

மற்ற பல நாடுகளைவிட, பின்லந்துக்கு ஒலிம்பிக் விளையாட்டை நடத்த உரிமையுண்டு. பின்னிஷ் மக்கள் ஆண்களாயினும், பெண்களாயினும் தேகப் பயிற்சியில் அளவுகடந்த ஆர்வமுள்ளவர்கள். ஒவ்வொரு கிராமத்திலும் ஸ்டேடியங்கள் இருக்கின்றன. ஒரு கிராமத்திலுள்ள ஸ்டேடியத்திற்கு வேடிக்கை பார்க்கச் சென்றேன். அப்பொழுது, அரைகுறையான ஆங்கிலம் பேசிய ஒரு பின்னிஷ் இளைஞன், என்னை இந்தியன் என்று தெரிந்து கொண்டு "ஹாக்கி (Hockey) யில் உலகப் புகழ் படைத்தது நீங்கள்தானே. வருகிற ஒலிம்பிக் விளையாட்டிலும் இந்தியா ஹாக்கியில் வெற்றிபெற வேண்டுமென்பது தான் எங்கள் ஆசை" என்று கூறினன். பின்னிஷ்காரர்கள் நன்ருகச் சாப்பிடுவார்கள். தயிர் சாப்பிடுவதிலே அவர்களுக்குப் பிரிய மதிகம். தயிருக்கு பின்னிஷ் பாஷையில் 'வீலி' என்று பெயர். தயிரே ஓர் ஆகாரம்போல. தயிருடன் சர்க்கரை இஞ்சி முதலியவைகளைச் சாப்பிடுவார்கள்.

கோடைகாலத்தில் பின்லந்தில் சூரியன் காலையில் ஒரு மணிக்கே உதயமாகிவிடும். இரவு 11-மணிக்குத்தான் அஸ்தமிக்கும். இரவு 12-மணிக்குக் கூடப் போதுமான வெளிச்சம் இருக்கும். அந்த வெளிச்சத்திலே சில சமயங்களில் புத்தகம் படிக்கலாம்; கடிதமும் எழுதலாம்.

பின்லந்தில் வீதிகளுக்குக் (Kattu) காட்டு என்று பெயர். ஒவ்வோர் இடத்திற்கும் இரண்டு பாஷைகளில் பெயர் இருக்கும். ஒன்று பின்னிஷ் மற்றொன்று ஸ்வீடிஷ். ஹெல்சிங்கி என்பது பின்னிஷ், ஹெல்சிங் போர்ஸ் என்று ஸ்வீடிஷ்காரர்கள் கூறுவர். பின்னிஷ்காரர்கள் (Suomi) ஸ்வோமி என்று தங்கள் நாட்டை அழைக்கின்றார்கள்.

பின்னிஷ் பாஷை உச்சரிக்க நன்றாக இருக்கும். சில வார்த்தைகளைப் பாருங்கள் :—

கீத்தோஸ் = வந்தனம்
கௌனிஸ் = அழகானது
பெய்வா = நமஸ்காரம்
யுக்ஸ் = ஒன்று
ஹோத்தேலி = ஹோட்டல்

இம்மாதிரி நான் கற்றுக்கொண்ட வார்த்தைகளைத் தப்பும் தவறுமாக உச்சரித்த பொழுது அவர்கள் பரமானந்தம் அடைந்தனர்.

ஹெல்சிங்கியிலிருந்து வல்கியாகோஸ்கி (Valkeakoski) என்னும் இடத்திற்கு ரயிலில் சென்றேன். சுமார் 100 மைல். வல்கியாகோஸ்கி ஒரு சிறு கிராமம். இங்கு ஒருபெரிய பேப்பர் மில் இருக்கிறது. ஹெல்சிங்கியிலுள்ள ஹோட்டல் மானேஜர் வல்கியாகோஸ்கியிலுள்ள ஒரே ஹோட்டலின் மானேஜரான தம் நண்பருக்கு எனது வருகையைப்பற்றி டெலிபோன் செய்திருந்தார்.

ரயில் பிரயாணம் சுகமாக இருந்தது. நான் இருந்த வண்டியில் சுமார் இருபது சாரணர்கள் பிரயாணம் செய்தனர். ஒருவன் (Autograph) ஆட்டோகிராப் புத்தகத்தை எடுத்தான். அவ்வளவு தான். அந்த வண்டியிலிருந்த அத்தனை பேருக்கும் நான் அவர்கள் புத்தகங்களிலோ அல்லது காகிதங்களிலோ கையெழுத்துப் போடவேண்டி நேர்ந்தது.

வல்கியாகோஸ்கி ரயில்வே ஸ்டேஷனுக்கு, ஹோட்டல் மானேஜர் வந்திருந்தார்; என்னைக் கண்டதும் புன்முறுவல் பூத்தார். அவர் பேசியது எனக்கு விளங்கவில்லை, நான் பேசியது அவருக்கு விளங்கவில்லை. ஆனால், நாங்களிருவரும் பேசிக்கொண்டே ஹோட்டலுக்குச் சென்றோம்.

அப்பொழுது மாலைநேரம்; வேலையை விட்டு வீட்டுக்குத் திரும்பும் நேரம். என்னைக் கண்டதும்

ஹோட்டலைச் சுற்றிக் கூட்டம்கூட ஆரம்பித்துவிட்டது. அடிக்கடி பால்கனிக்கு வந்து 'காட்சி' யளித்தேன். என்றாலும் பயனில்லை. அந்நியன் ஒருவன் வந்திருக்கும் செய்தி மிக விரைவாகப் பரவிற்று.

நான் தங்கியிருந்த ஹோட்டலில் நான் ஒருவன் தான். மானேஜரும் ஒருவர் தான். அவர்தான் மானேஜர்; அவர்தான் பட்லர்; அவர்தான் போர்ட்டர். நான் பேசியது ஒன்றுமே அவருக்கு விளங்கவில்லை. எனவே, ஹெல்சிங்கிக்கு டெலிபோன் செய்தேன்; எனக்கு என்ன வேண்டுமென்பதை ஹெல்சிங்கி ஹோட்டல் மானேஜர், இந்த வல்கியாகோஸ்கி மானேஜருக்கு பின்னிஷ் பாஷையில் கூறினார். இப்படியிருந்தது எனது நிலைமை.

மறுநாள் காலை அங்குள்ள பெரிய பேப்பர் மில்லுக்குச் சென்றேன். அங்கு இரண்டு பெரிய உத்தியோகஸ்தர்கள் மிக நன்றாக ஆங்கிலம் பேசினர். இந்தியனொருவன் தங்கள் பேப்பர் மில்லுக்கு வரக் கூடுமென்று அவர்கள் எதிர்பார்க்கவே யில்லையாம்.

பேப்பர் மில் மிகப் பெரியது. 3,500 பேர் வேலை செய்கிறார்கள். இதனைப் பார்வையிட்டதும் மோட்டார் படகில் சுமார் மூன்று மணிநேரம் வல்கியாகோஸ்கியின் சுற்றுப்புறக் காட்சிகளைக் காண்பித்தனர். பிறகு, அவர்களுடைய கிளப்பில் ஒரு விருந்தளித்தனர். காந்தியடிகளைப் பற்றியும், பக்கிரிகளைப்

பற்றியும் ரசமான கேள்விகள் கேட்டனர். பழமை யான நாகரிகமுடைய இந்தியநாடு விரைவில் சுதந்தரம் பெறத் தாங்கள் பிரார்த்திப்பதாகக் கூறினர்.

வல்கியாகோஸ்கி வாழ்க்கை எனக்கு மிக உற்சாகமா யிருந்தது. பின்லந்தைவிட்டு வரும்பொழுது எனக்கு உண்மையிலேயே வருத்தந்தான். தங்களுடைய சுதந்தரத்திற்காகப் போராடும் வீரம் நிறைந்த பின்லந்து வெற்றிபெற நாம் பிரார்த்திப்போம்.

———

# 8. ஜெர்மனியில் ஒரு தமிழ்ப்புலவர்

தமிழர்கட்குத் தாய்மொழிமீது குன்றாத காதலுண்டு. யாராவது அந்நியர்கள் தமிழில் பேசுவதைக் கண்டால் ஆனந்தமடைகின்றோம். அந்த ஆனந்தத்தில், சில சமயங்களில், நம்மையும் நாம் மறந்துவிடுகிறோம். சில நாட்களுக்கு முன் ஜெர்மனியின் தலைநகரான பர்லின் நகரில் ஸ்ரீமான் பைதான் சாஸ்திரியாரைச் சந்தித்தபொழுது நான் ஆனந்தங் கொண்டது இயற்கையே யாகும்.

பைதான் சாஸ்திரியாரைப் படத்தில் பாருங்கள். அவருக்கென்ன வயது இருக்கும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? அவருக்கு சஷ்டியப்த பூர்த்தி முடிந்து இப்பொழுது இரண்டு வருடங்கள் ஆகின்றன. இச் சாஸ்திரியார் 1920-ல், அதாவது 45-வது வயதில், கல்யாணம் செய்துகொண்டார். மூன்றாவது தாரமல்ல; முதல்தாரந்தான்.

பர்லின் நகரில் இந்திய மாணவர் சங்கக் கூட்டமொன்றிலே நண்பரொருவர் பைதான் சாஸ்திரியாரை எனக்கு அறிமுகப் படுத்தி வைத்தார். "உங்களைச் சந்திக்க நிரம்ப சந்தோஷம்!" என்று வெகு சீக்கிரமாக ஒரு நிமிஷத்திற்குள் கூறி என் கைகளைக் குலுக்கினார் சாஸ்திரியார். தமிழிலே பேச வகையறியாது தவித்துக்கொண்டிருந்த எனக்கு, தமிழ் பேசுவதற்கு

ஓர் ஆள் அகப்பட்டாரே என்று சந்தோஷம். ஆனால் பறவைக் கப்பல் காலத்திலே யந்திரி இராமநாதன் மாட்டு வண்டியில் செல்வதுபோல, இச் சாஸ்திரி யாரிடம் பேசுவதற்கு வேண்டிய பொறுமையை ஒரு வாறு அடைய முயன்றேன்.

"தமிழ் நாட்டிற்கு நீங்கள் எப்பொழுது சென் றீர்கள் ?" என்றேன்.

"முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்னே அதாவது சுமார் மூன்று மகாமகங்கட்கு முன்னே" என்றார் சாஸ்திரியார்.

அஞ்ஞானத்தில் அமிழ்ந்து கிடக்கும் இந்திய மக்களைக் கரையேற்றுவான் வேண்டி, நாகரிக நாடு களிலிருந்து பாதிரிகள் கூட்டம் என்ற வெள்ளைச் சரக்கு இந்தியாவில் இறக்குமதி யாகின்றதல்லவா ? ஸ்ரீமான் பைதான் சாஸ்திரியாரும் இந்த இனத்தைச் சேர்ந்தவர்தான்; என்றாலும் பரந்த நோக்க முள்ளவர். "நீங்கள் மீண்டும் தமிழ்நாடு சென்று ஏன் கிறிஸ் தவப் பிரசாரம் செய்யக்கூடாது ?" என்று நான் கேட்டபொழுது, "நான் அதை விரும்பவில்லை. நீங் கள் நம்பும் கொள்கையை நீங்கள் ஆதரியுங்கள் ; மத மாற்றத்திலே எனக்கு அக்கறை யில்லை. எல்லா மதங் களும் உயர்ந்தவை என்று நான் நம்புகின்றேன்" என்றார். வெளி நாட்டிலிருந்து இந்தியாவுக்கு வரு கிற பாதிரிகளிற் பலர், இத்துறையில் விருப்பமில்லாத இளைஞர்கள் என்று கூறுவதில் தவறில்லை யல்லவா ?

பைதான் சாஸ்திரியார், ஒரு கிறிஸ்தவ மதப் பிரசாரகர் என்பதற்காகவோ, அல்லது நாஜி இயக்கப் பிரசாரகர் என்பதற்காகவோ நாம் எளிதில் அவரைப் புறக்கணித்துவிட முடியாது. எட்டு வருடங்கள் தமிழ்நாட்டில் தங்கிய இவர், முறையாகத் தமிழ் பயின்றார். தமிழ்க் கலையில் உண்டாகும் இன்பத்தை ரஸிக்கும் தன்மை இவருக்கு உண்டு. அடுக்களையிலும் ஆங்கிலம் பேசுந் தன்மையுடையோரை மக்களாகக் கொண்ட தமிழன்னை, வெளிநாட்டிலே யுள்ள இச் சுவீகார புதல்வரைக் கண்டு பெருமை கொள்வாள் என்பதில் ஐயமில்லை.

'நீங்கள் என் வீட்டிற்கு ஞாயிற்றுக்கிழமை வந்து சாப்பிடவேண்டும்' என்றார் சாஸ்திரியார். இந்த அழைப்பை மறுக்கக்கூடிய தைரியம் எனக்கு அப்பொழுது இல்லையென்பதை ஒப்புக்கொள்கிறேன். சொல்லுகின்றபடி நடக்க வேண்டுமென்பதில் கண்டிப்பான கொள்கை எனக்கு உண்டு. அதனை நடைமுறையில் காட்ட இதைவிடத் தக்க சந்தர்ப்பம் எப்பொழுது கிடைக்கப் போகிறது?

குறிப்பிட்ட ஞாயிற்றுக்கிழமை இச் சாஸ்திரியார் வீட்டுக்குச் சென்றேன். இவரின் அருமை மனைவியும் அன்புமகனும் வரவேற்றனர். தமிழ்நாட்டுப் படங்கள், கூஜா செம்பு மணி முதலிய பொருள்கள், ஏராளமான தமிழ்ப் புத்தகங்கள், சில தமிழ்ப் பத்திரிகைகள் ஆகியவற்றைக் கண்டேன்.

ஆனால் இந்த இடத்திலும் கிராமபோன் தொல்லைதான். கே. பி. சுந்தராம்பாள் பாடிய காந்திப் பாட்டு 'பிளேட்' ஒன்றைக் கிராமபோன் பெட்டியில் தொடங்கிவிட்டார் சாஸ்திரியாரின் மனைவி. அப்பொழுது எனக்கு எப்படியிருந்திருக்குமென்று நீங்கள் கருதுகின்றீர்கள்?

ஸ்ரீமான் சாஸ்திரியார் தில்லை நகரசபையில் அங்கத்தினரா யிருந்திருக்கிறார். காலஞ்சென்ற திவான் பகதூர் சா. ராம. ராமசாமி செட்டியாரவர்கள் அப்பொழுது நகரசபைத் தலைவரா யிருந்தார்கள். ஸ்ரீமான் செட்டியார் அவர்களைச் சாஸ்திரியாருக்கு நன்கு தெரியுமாம். "நாட்டுக்கோட்டைச் செட்டியார்களையும் ஆச்சிமார்களையும் வெகு சீக்கிரத்தில் கண்டுபிடித்து விடலாம்" என்றார்.

"எப்படி?" என்றேன்.

"தலை முழுமொட்டை, கழுத்திலே கொட்டை; ஆச்சிமார்கள் கனத்த பூடிகள் அணிந்திருப்பார்கள்" என்றார்.

"நீங்கள் பெருமையாகக் கூறுவதாக நான் கருதுவதா? அல்லது பரிகசிப்பதாகக் கருதுவதா?" என்று கேட்டேன்.

"நாட்டுக்கோட்டைச் செட்டியார்களைப் பற்றி எனக்கு எப்பொழுதும் நல்லபிப்பிராயம் உண்டு.

சிதம்பரத்தில் அவர்கள் திருப்பணியை நான் அறி வேன். அவர்களுடைய உதவியின்றேல் தமிழ்நாட்டிற் பல கோவில்கள் பாழடைந்திருக்கும். தமிழ் நாட்டின் பண்டைச் சிற்பக்கலையைக் காப்பாற்றிய பெருமையிற் பெரும்பகுதி அவர்களைச் சார்ந்தது. செட்டியார்களின் தர்மத்திற்கு முக்கிய காரணம் ஆச்சிமார்களின் மதப்பற்றுத்தான். முப்பத்தைந்து வருடங்கட்கு முன் கண்ட காட்சியைக் கூறு கின்றேன். நீங்கள் தவருகக் கருதவேண்டா" என்ருர்.

"சில மாதங்கட்கு முன் ஒரு செட்டியாரும் ஓர் ஆச்சியும் இங்கு வந்தார்களே, உங்களுக்குத் தெரி யுமா?" என்றேன்.

'எனக்குத் தெரியவே தெரியாது. அப்படி யாராவது இனி இங்கு வந்தால் தயவுசெய்து எனது விலாசத்தைக் கொடுங்கள். அவர்களை வரவேற்று, அவர்களோடு தமிழில் பேசி, அவர்கட்கு இந்த ஊரைக் காண்பித்துப் பெரிதும் மகிழ்ச்சி யடை வேன்' என்ருர். இத்தருணத்தில், ரஸமான சம்பவம் ஒன்றையும் கூறிஞர். இந்தியாவிலிருந்து இவர் ஜெர்ம னிக்கு வந்ததும், சர்வகலாசாலையில் அன்னிய நாட்டு மாணவர்கள் சம்பந்தமானவற்றைக் கவனிக்கும் அதிகாரியிடத்திற் சென்று, "இந்தியாவிலிருந்து யாரா வது தமிழ் மாணவர்கள் வந்தால் தயவுசெய்து தெரிவி யுங்கள்" என்று கூறிஞராம். பல ஆண்டுகள் வரை ஒரு தமிழரையும் இவர் சந்திக்கவில்லை. பன்னிரண்டு

ஆண்டுகட்குப் பின்னர் அவ்வதிகாரி "தமிழ் என்று ஒரு பாஷையிருப்பதாக நான் நம்பவில்லை" என்று கூறினாராம்.

சாஸ்திரியாருக்கு, என்னிடம் பேசப் பேசத் தமிழ்நாட்டு நினைவுகள் அதிகமாயின. இட்டலி, சாம்பார், அப்பம், அப்பளம் முதலியவைகளைப் பற்றி அவர் கூறியபொழுது எனது நாக்கில் ஜலம் ஊறிற்று. அதை நினைக்கப் பரஸ்பரம் இருவரும் வருந்தினோம்.

"அந்தக் காலத்திலேயே அரசியல் உணர்ச்சி வலுக்க ஆரம்பித்துவிட்டது. பாங்கிப்பேட்டையில் நான் பிரசங்கம் செய்து கொண்டிருந்த பொழுது இளைஞர்கள் பலர் 'வந்தே மாதரம்' என்று கூறிக்கொண்டு, கூட்டத்திற்கு வந்து என்மீது கல்லை விட்டெறிந்தனர். நான் ஓர் ஆங்கிலேயன் என்று அவர்கள் தவருகக் கருதியதுதான் இதற்குக் காரணம்" என்ருர்.

இவர் தரங்கம்பாடியில் வசித்த காலத்தில் அங்கு ரயில் கிடையாதாம். சீகாழி ஸ்ரீமான் ப. அ. முத்துத் தாண்டவராய பிள்ளையிடம் இவர் பாடங் கேட்டார். "கும்பகோணத்தில் ஒரு கிழப் பார்ப்பான் ஐம்பது ரூபாயை வாங்கிக்கொண்டு மறைந்து விட்டான்" என்று சிரித்துக்கொண்டே கூறினர்.

எங்கள் சம்பாஷணையின் மத்தியில் ஹிந்தியைக் கட்டாய பாடமாக்கும் பிரச்னையைப்பற்றி விவாதித்

தோம். சாஸ்திரியார் கூறிய அபிப்பிராயத்தின் சாரம் :—

“ஹிந்தியைக் கட்டாய பாடமாக்குவது நல்லது. ஹிந்தியால் தமிழுக்குத் தீங்குண்டாகும் என்று கருதுவது தவறு. தேசத்திற்குப் பொதுவான பாஷை அவசியம். எவ்விதமாகப் பார்த்தாலும் ஹிந்திதான் அந்த ஸ்தானத்தை ஏற்றுக்கொள்ளக் கூடும். அடுக்களையில் ஆங்கிலத்தை உபயோகிப்பதுபோல ஹிந்தியைத் தமிழர்கள் உபயோகிக்கக் கூடாது. இவ்விரண்டு பாஷைகளையும் தமிழர்கள் தேவைக்குத்தான் உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும். தமிழனோடு தமிழன் ஆங்கிலத்தில் பேசுவதைவிட ஹிந்தியில் பேசுவது எந்த விதத்தில் தீமை பயக்கும்? ஐரோப்பாவிலுள்ள பலரும் இரண்டு மூன்று பாஷைகள் பேசுகின்றனர். அதனால் அவர்களுக்குத் தாய்மொழிப் பற்று குன்றுவதில்லை. ஹிந்தியைக் கண்டு தமிழ்ப் பண்டிதர்கள் மருள்வதிலே அர்த்தமில்லை.”

சாஸ்திரியாருக்கு ஹிந்தியிலும் போதிய அறிவுண்டு என்பதை வாசகர்கட்குக் கூற விரும்புகின்றேன். சாஸ்திரியார் இந்தப் பிரச்னையை ஆவலோடு கவனித்து வருகிறார். இது சம்பந்தமான ‘நவசக்தி’யின் தலையங்கத்தைப் பெரிதும் பாராட்டினார்.

‘ஆ ஹிட்லர் ஆர்’ என்ற புத்தகத்தை சாஸ்திரியார் 1936-ல் தமிழில் எழுதியுள்ளார். சில சமயங்களில் கட்டுரைகளும் எழுதுகிறார். எல்லாம் நாஜி

இயக்கப் பிரசாரம். பாவம், அவர் என்ன செய்யக் கூடும்? ஜெர்மனியில் வசித்தால், இவைகளை விரும்பி ஞலும் விரும்பா விட்டாலும் செய்துதான் ஆக வேண்டும்.

தமிழ்க்கதைகள் சிலவற்றை ஜெர்மன் பாஷையில் ஒரு புத்தகமாக எழுதி யிருக்கிருர். திருக்குறள், பெரிய புராணம், திருப்பாடற்றிரட்டு முதலிய நூல் களிலே இவருக்கு அதிக விருப்பம். இவர் ஒரு சித் திரக்காரர். கன்னியாகுமரியை நினைவுள்ளங்கொண்டு இவர் தயாரித்த படம் மிக நன்ரு யிருக்கிறது. இவர் புத்தகத்திலுள்ள படங்கள் அனைத்தும் இவர் தீட்டி யனவே யாகும்.

பாரதியார் நூல்களிலே இவருக்குப் பேரார்வம். பாரதியாரைப் பற்றித் தெரிந்துகொள்ளவும், அவ ரைப்பற்றி ஜெர்மன் இலக்கியப் பத்திரிகைகளில் எழுத வும், பாடல்களை ஜெர்மன் பாஷையில் மொழிபெயர்க்க வும் விரும்புகிருர். ஜெர்மன் சர்வகலாசாலையில் இவர் தமிழாசிரியராக இருப்பதால் இவர் எழுத்துக்கு இங்கு மதிப்புண்டு. ஜெர்மன் அரசாங்க உத்தரவுப்படி இவர் பணத்தை வெளிநாட்டுக்கு அனுப்பிப் புத்தகம் வாங்கு தல் இயலாத காரியம்.

2 1 APR 1982

# 9. பிராஹா

சிறகிழந்த பறவைபோன்று துடிக்கிறது செக்கோஸ்லோவக்கியா. மகா யுத்தத்திற்குப் பின் உருவான இந்தத் தேசத்தில் தாமஸ் மஸாரிக் தலைவராயிருந்தார். தற்பொழுது ஏற்பட்டுள்ள துர்ப்பாக்கியமான நிலைமையைப்பற்றி எண்ணாமலேயே அவர் சென்ற வருஷம் காலமாகிவிட்டார்.

ஏறக்குறைய ஒரு வருஷத்திற்கு முன் இந்நாட்டிற்குச் சென்றிருந்தேன். அங்கெழுந்த நினைவுகளெல்லாம் நேற்று நடந்தவை போலவே இருக்கின்றன. பாரிஸ் நகரத்து இரவுக் கிளப் ஒன்றில் ஆரஞ்சுப் பழச்சாற்றைச் சுவைத்துக் கொண்டிருந்த பொழுது அருகிலிருந்த ஒரு வெள்ளைக்காரரிடம் ஆங்கிலத்தில் பேசினேன். அவர் சரியாகப் பதில் பேசமுடியாமல் திணறினார். வெள்ளைக்காரர்கள் எல்லோருக்கும் ஆங்கிலம் தெரியுமா, என்ன?

என் அருகிலிருந்த அந்த வெள்ளைக்காரர் ஒரு செக்கோஸ்லோவக்கியர். அவர் பேசிய அரைகுறையான ஆங்கிலம் நான் அறிந்துகொள்வதற்குப் போதுமானதாக இருந்தது.

நான் ஓர் இந்தியன் என்று தெரிந்துகொண்டதும் காந்தியைப் பற்றிய நினைவுதான் அவருக்கு உதித்தது. “மகாத்மா காந்தி சௌக்கியமாக இருக்

கிறார்?" என்று அவர் கேட்டார். ஆங்கிலமே தெரியாத அவர் மனைவியும் சகோதரியும் 'காந்தி' என்ற பெயரைக் கேட்டதும் என்னைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தனர்.

"ஐரோப்பாவிலேயே எங்கள் தேசந்தான் உண்மையான ஜனநாயக தத்துவமுள்ள நாடு. நீங்கள் அவசியம் அங்கு வாருங்கள்" என்று அவர் சொல்லித் தமது விஸிட்டிங் கார்டைக் கொடுத்தார். அவர் பெயர் ஸ்ரீ புஸ்மென் என்று அதிலிருந்து தெரிந்தது. அதைப் பார்த்ததும் அவர் ஓர் அட்வகேட் என்று தெரிந்து கொண்டேன். புஸ்மென் தம்பதிகள் சம்பிரதாய முறையில்லாமல் மிக அன்பாகப் பழகினார்கள். இந்தத் தம்பதிகளின் விருந்தினனாகத் தங்க வேண்டுவது அவசியமெனத் தீர்மானித்தேன்.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு சுமார் பத்து வாரங்கள் ஹிட்லரின் ஜெர்மனியில் தங்கியிருந்தேன். ஜெர்மன் இளைஞர்களோடு பழகப் பழக அவர்களுடைய அபிலாஷைகள் தெரியவந்தன. இழந்து போன குடியேற்ற நாடுகளைப் பற்றியும் வெளிநாட்டிலுள்ள ஜெர்மனியர்களைப் பற்றியுமே அவர்கள் கனவு காண்கின்றனர். செக்கோஸ்லோவக்கிய நாட்டின் மொத்த ஜனத்தொகை ஒன்றரைக்கோடி யென்றும், அதில் ஐந்தில் ஒரு பகுதியினரான ஜெர்மானியர்கள் உரிமையின்றி வாழ்வதாகவும் ஜெர்மன் பத்திரிகைகள் கிளர்ச்சி செய்துகொண்டிருந்தன. ஜெர்மனிக்குள்

நுழையும் செக்கோஸ்லோவக்கியர்கள், மற்ற அந்நிய நாட்டினரைவிடக் கடுமையாக நடத்தப்பட்டார்கள்.

ஜெர்மனியில் தங்கியிருந்தபொழுது செக்கோஸ்லோவக்கியாவைப் பற்றித் தினந்தோறும் புதுப் புது விஷயங்கள் தெரிந்துகொண்டேன். கடைசியாக ஒரு நாள் செக்கோஸ்லோவக்கியாவின் தலைநகரை யடைந்தேன். இந்நகரை பிராஹா என்று செக்கோஸ்லோவக்கியர்கள் அழைக்கிறார்கள். ஆங்கிலத்தில் பிரேக் (Prague) என்று பெயர். பழமையும் பெருமையும் நிறைந்த இந்த அழகிய தலைநகரை நாமும், செக்கோஸ்லோவக்கியர்களைப்போலவே பிராஹா என்றே அழைப்போம்.

இந்த நாட்டின் நாணயம் குரோனர். ஒரு பவுனுக்கு, அப்பொழுது, சுமார் 145 குரோனர்கள். ஐந்து, பத்து, ஐம்பது, நூறு குரோனர்கட்கு நோட்டுகள் உண்டு.

பவுனுக்கு 20 ஷில்லிங்காய் இருப்பதைவிட 145 குரோனர் சௌகரியமல்லவா? பணத்தைத் தண்ணீர்போல் செலவு செய்யலாம். போர்ட்டருக்கு ஐந்து குரோனர், வாடகை மோட்டாருக்கு 20 குரோனர், ஹோட்டலுக்கு நாளொன்றுக்கு 40 குரோனர் என்றால் எவ்வளவு 'கண்ணியமாக' இருக்கிறது! ஏற்கெனவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஹோட்டலுக்குப் போய்ச் சேர்ந்தேன்.

சிறிதுநேரங் கழித்து ஹோட்டல் சிப்பந்தியைக் கொண்டு டெலிபோன் செய்தேன். சில நிமிஷங்கட்கெல்லாம் டாக்டர் புஸ்மென் வந்து சேர்ந்தார். அவரும் நானும் வெளியில் நின்றஅவருடைய மோட்டாருக்குச் சென்றோம். அது 1928-ம் வருஷத்து 'மாடல்' மோட்டார். 'ஸ்டார்ட்' செய்ததும் 'கட கட'வென்று சப்தமிட ஆரம்பித்தது. சரியாக வீடு போய்ச் சேர்வேனு என்று எனக்குச் சந்தேகம். நான் இம்மாதிரி நினைத்தபொழுது வண்டி திடீரென்று நின்றது.

புஸ்மென் இதைக் குறித்து ஆச்சரியமோ, கவலேயோ கொள்ளவில்லை. அவருக்கு இது ஒரு சர்வசாதாரணமான சம்பவம். அருகிலிருந்த மெக்கானிக்கை அழைத்து வந்தார். அவன் "இங்லண்டர் எங்கே?" என்றான். புஸ்மென் ஸ்குரூ டிரைவர் ஒன்றை அவனிடம் கொடுத்தார்.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. "ஸ்குரூ டிரைவரை ஏன் இங்லண்டர் என்று அழைக்கின்றீர்கள்?" என்றேன்.

அவர் சிரித்துக்கொண்டே "இது ஒரு காரணப் பெயர்" என்றார்.

"அந்தக் காரணத்தை நான் தெரிந்துகொள்ளக் கூடாதா?" என்றேன்.

"இந்த ஸ்குரூ டிரைவரைக் கொண்டு எல்லா விதமான ஸ்குரூக்களையும் முடுக்கலாம். அதைப்

போல, ஐரோப்பாவில் ஏற்படும் சிக்கல்களை முடுக்கி ஒழுங்குபடுத்துகிறவர்கள் ஆங்கிலேயர்கள். அதனால் தான் ஆங்கிலேயர்களுக்கு இந்தக் காரணப்பெயர் வந்தது" என்றார்.

"இது ஆங்கிலேயர்களுக்குக் கௌரவமா? அல்லது அவமதிப்பா?" என்றேன்.

"உங்கள் மனத்திற்கு எப்படித் தோன்று கிறதோ அப்படி வைத்துக்கொள்ளுங்கள்" என்றார் புஸ்மென்.

ஒருவாறாக வீடுபோய்ச் சேர்ந்து உணவருந்தினோம். அங்கிருந்த வேலைக்காரிக்கு என்னைப் பார்க்கப் பார்க்க வியப்பு அதிகரித்தது. அவள் செக் முறைப்படி மரியாதை செய்யும்போதெல்லாம் எனக்குச் சிரிப்பாக இருக்கும்.

டாக்டர் புஸ்மென் மனைவி என்னைப் பல கேள்விகள் கேட்டார். புஸ்மெனுக்கு அன்றிரவு வக்கீல் உத்தியோகம் போய், மொழிபெயர்க்கும் உத்தியோகம் வந்துவிட்டது.

இரவு பத்து மணி ஆயிற்று. "சரி, போய் ஊர்சுற்றிப் பார்க்கலாம் வாருங்கள்" என்றார் புஸ்மென். "இந்த அர்த்த ராத்திரியில் எப்படி ஊர் சுற்றுவது?" என்றேன். "பிராஹாவின் அழகை நீங்கள் இரவில்தான் அனுபவிக்கவேண்டும்" என்றார். இரண்டு மணிநேரம் சுற்றியபின் ஆற்று

நடுவேயுள்ள ஒரு கிளப்பில் 'சூடான தேத்தண்ணீர்' அருந்தினோம். விருந்துக் களைத்தால் எவ்வளவு தான் தொந்தரவு கொடுப்பது? அன்றிரவே புஸ்மென் தம்பதிகளிடம் விடை பெற்றுக்கொண்டேன்.

* * *

ஐந்தாவது மாடியில் ஒரு பெரிய அறை. கதவை மெள்ளத் தட்டினேன். கன்னங்கரேலென்று ஓர் அகஸ்தியர் கதவைத் திறந்தார். இவர்தான் ஸ்ரீ நாராயண நம்பியார்.

ஸ்ரீ நம்பியார் ஒரு சிறந்த அரசியல் அறிஞர். இந்தியாவிலுள்ள சில முக்கியமான ஆங்கில தின சரிகட்குப் பிராஹாவிலிருந்து கட்டுரைகள் எழுது கிறார். ஜெர்மனியில் பல வருஷம் தங்கி சோஷலிஸ்டுக் கட்சியில் முக்கியஸ்தராக விளங்கினார். ஹிட்லர் ஆட்சிக்கு வந்ததும் நம்பியார் சிறைப்பட்டார். ஸ்ரீ சுபாஷ் பாபு முதலியோரின் முயற்சியால் இவர் விடுதலை யடைந்தார்.

பிராஹாவிலுள்ள இந்தோ-செக்கோஸ்லோவக் கியச் சங்கக் கூட்டமொன்றுக்கு ஸ்ரீ நம்பியார் என்னை அழைத்துச் சென்றார். ஸ்ரீ வித்தல்பாய் படேல், சுபாஷ்போஸ் முதலியவர்கள் முயற்சியால் மத்திய ஐரோப்பாவில் இம்மாதிரியான பல சங்கங்கள் உண்டாகி யிருக்கின்றன. அன்றிரவு கூட்டத்திற் குச் சுமார் 30 பேர் வந்திருந்தார்கள். அவர்களுள் பத்துப் பேர் பெண்கள். கூட்டம் முடிந்ததும் தலைவர் புரொபஸர் லெஸ்னி ஸ்ரீ நம்பியாரையும் என்னையும்,

அங்கு வந்திருந்த மற்றுமோர் இந்தியராகிய சிங் என்பவரையும் ஒரு ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றார். புரொபஸர் லெஸ்னி ஐரோப்பாவிலேயே சிறந்த சம்ஸ்கிருத பண்டிதர்; இந்தியக் காவியங் களை நன்காராய்ந்த ஓர் அறிஞர். ஐரோப்பாவில் இவருக்கு நல்ல மதிப்பு. சமீபத்தில் பண்டித ஜவாஹர்லால் நேரு பிராஹாவுக்கு விஜயஞ் செய்த பொழுது அவரை இவ்வறிஞர் வரவேற்றார்.

மறுநாள் ஸ்ரீ நம்பியார் மற்றொரு நண்பரை அறி முகப்படுத்தினார். நான் தமிழன் என்று தெரிந்ததும் அந்த செக்கோஸ்லோவக்கியருக்கு ஆனந்தம் தாங்க வில்லை. தாமும் தமிழ் படிப்பதாக அவர் கூறினார். அவர் பேசிய இரண்டொரு வார்த்தைகள் 'தமிழ்' என்று அவர் கூறிய பின்னர்தான் எனக்குத் தெரியவந்தன. தமிழர்கள் எல்லாம் ஆங்கிலத்தில் பேசும்போது, பாவம்! செக்கோஸ்லோவக்கியர்க ளாவது தமிழ் பேசட்டும்!

பிராஹாவுக்கு வந்து நாலைந்து நாட்களாகியும் இன்னும் ஒரு சினிமாவைக் கூடப் பார்க்கவில்லையே என்று வருத்தப்பட்டேன். ஊருக்கு நடுவே போனேன். ஒரு தியேட்டர்கூடக் கண்ணுக்குத் தென்படவில்லை. ஆங்கிலத்தில் கேட்டாலும் யாருக் கும் புரியவில்லை. கடைசியாக ஒருவர், பூமிக்குக் கீழே செல்லும் ஒரு வழியைக் காட்டினார். என்ன ஆபத்து நேரப் போகிறதோ என்ற அச்சந்துடன் கீழிறங்கி னேன்.

என்ன ஆச்சரியம்! பூமிக்குக் கீழே ஒரு பட்டணமா? காப்பி கிளப்புகள்! டான்ஸ் ஹால்கள்! ஆயிரம் பேர், இரண்டாயிரம் பேர்கள் உட்காரக்கூடிய சினிமாத் தியேட்டர்கள்!

ஐரோப்பாவிலுள்ள சிறந்த தியேட்டர்களோடு பிராஹா தியேட்டர்களையும் ஒப்பிடலாம். படங்களிலிருந்து செக்கோஸ்லோவக்கியர்களின் வாழ்க்கை நமக்கு ஒருவாறு தெரிகிறது. ஜனநாயக உணர்ச்சியும், உடல்மைப்பும், கட்டுப்பாடும், நல்ல உழைப்பும் உள்ள மக்கள் செக்கோஸ்லோவக்கியர்கள். பிரபலமான ஸ்கோடா தொழிற்சாலையும், பாட்டா தொழிற்சாலையும் அந்நாட்டில்தான் இருக்கின்றன.

செக்கோஸ்லோவக்கியர்கட்குள் சகோதர உணர்ச்சியையும், தேசப்பற்றையும் வளர்ப்பது சொக்கோல் என்னும் உடற்பயிற்சி சங்கம். தற்பொழுது ஆண்களும் பெண்களுமாக இதில் எட்டு லட்சம் அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். ஆனால் அத்தனை பேரும் செக்கோஸ்லோவக்கியர்கள். மருந்துக்குக் கூட ஒரு ஜெர்மானியரைப் பார்க்க முடியாது. சமயம் நேர்ந்தால் அத்தனை பேரும் சண்டைக்குத் தயாராயிருப்பார்கள்.

ஆனால் சமீபத்தில் ஏற்பட்ட அரசியல் சம்பவங்களால் செக் நாட்டின் நிலைமை மிகக் கீழே போய் விட்டது. ‘இங்லண்டர்’ செக்கோஸ்லோவக்கியாவின் ஸ்குரூவை முடுக்குவதற்குப் பதிலாக, அதைக் கழற்றி விட்டார்!

---

# 10. பொருட்காட்சிக்குத் தக்க மாளிகை

ஜினிவாவில் சர்வதேச சங்கத்திற்கு முன்னால் நின்றுகொண்டிருந்தேன். முறையிடுவதற்காக அல்ல, பார்ப்பதற்காக.

மணிக்கொரு முறை பார்வையாளர்களை அழைத்துக் கொண்டுபோய்ச் சுற்றிக்காண்பிப்பார்கள். இதற்கெனக் கட்டணமும் வசூலிக்கிறார்கள். இக்கட்டிடத்தைச் சுற்றி வரும்போது, அங்கு வேலை செய்யும் பல தேசத்து மனிதர்களைப் பார்க்கின்றோம். அப்பொழுது இது சர்வதேச மிருகக் காட்சிசாலையோ என்ற சந்தேகமுண்டாகிறது.

கோடிக்கணக்கான ரூபாய் செலவில் கட்டப்பெற்ற இக்கட்டிடங்கள் அழகாய் இருக்கின்றன என்று கூறவேண்டுவதில்லை. இச்சங்கத்தால் பயனில்லாவிட்டாலும், இச் சங்கக் கட்டிடம் பிற்காலத்தில் ஒரு பொருட்காட்சிச் சாலையாக வைக்கப் பயன் படுமென்று கருதுகின்றேன்.

எங்களை அழைத்துச் சென்ற மனிதன் ஓயாது பேசிக்கொண்டே இருந்தான். அவன் பேசியது எங்களுக்குச் சரியாக விளங்கவுமில்லை; இதைக் குறித்து நாங்கள் ஆச்சரியப்படவுமில்லை. சர்வ தேச சங்கத்தில் வேலை செய்யும் ஒருவனிடமிருந்து நாம் வேறு என்ன எதிர்பார்க்க முடியும்?

## வேகமாகப் பேசுபவன்

விளக்கிச் சொல்லும் அந்த மனிதன் மிக வேகமாகப் பேசினன். இக் கட்டிடம் கட்டச் செலவான தொகையை இங்கிலீஷ், அமெரிக்க, பிரெஞ்ச், ஜெர்மன், இத்தாலிய நாணயம் முதலியவைகளில் அவன் ஒரே மூச்சில் கூறியபொழுது சிறிது ஆச்சரியப்பட்டோம். "இதுதான் கவுன்சில் ஹால்" என்று கூறி அதைப்பற்றிப் பத்து நிமிஷங்கள் பிரசங்கம் செய்தான். அவன் பிரசங்கம் செய்ய ஆரம்பித்த இரண்டொரு நிமிஷத்தில், நாங்களெல்லோரும் தனித்தனியாகப் பிரிந்து அந்தப் பெரிய கவுன்சில் ஹாலைச் சுற்றிப் பார்த்தோம். இந்த மனிதனுடைய பேச்சைக் கேட்பவர்கள் யாருமேயில்லை. ஆனல், அதற்காக அவன் பேச்சை நிறுத்தவில்லை.

அந்த ஹாலிலுள்ள ஒவ்வொரு மேஜையிலும், ஒவ்வோர் அங்கத்தினருக்கும் ஏழு ஸ்விட்சுகள் இருக்கும். கூட்டம் நடைபெறும்பொழுது இந்த அங்கத்தினர் தமது தலைபோனை (Head Phone) வைத்துக்கொண்டு, தமக்கு எந்தப் பாஷை தெரியுமோ, அந்த பாஷைக்குரிய விசையை அழுத்தினல், அந்த பாஷையில் மொழிபெயர்த்துச் சொல்லப்படும் பிரசங்கத்தைக் கேட்பார்.

இந்த சர்வதேசப் பிராணிகள் உட்காரும் மண்டபத்தின் மேலே ஸ்பானியர்கள் செய்த, தங்க முலாம் பூசப்பெற்ற, பல அரிய சித்திர வேலைப்பாடுகளைப்

பார்த்தோம். இவைகளைப் பார்த்துக்கொண்டிருந்த பொழுது, ஸ்பெயின் சர்வதேச சங்கத்திலிருந்து விலகியது என்ற செய்தி கிடைத்தது. உடனே ஸ்பெயின் அரசாங்கத்தார், இந்தத் தங்கம் பூசிய சித்திரவேலைகளையெல்லாம் தங்கள் தேசத்திற்கு எடுத்துக்கொண்டு போய்விடுவார்களோ என்ற சந்தேகம் தோன்றிற்று. ஏனெனில், இத்தாலிய அரசாங்கம், சர்வதேச சங்கத்திலிருந்து விலகிக் கொள்ளுகையில், தான் சங்கத்திற்களித்த கட்டிடங்களை யெல்லாம் திரும்பவும் எடுத்துக்கொண்டது.

சங்கக் கட்டிடத்தைச் சுற்றி வருகையில், பயனில்லாத இச்சனியனுக்கு, இந்தியா வருடந்தோறும் லட்சக்கணக்கான ரூபாய்களைக் கொட்டிக் கொடுக்கும்படி கட்டாயப்படுத்தப்படுகிறதே என்பதை நினைக்க மிக வருத்தமாக இருந்தது.

சுமார் ஒரு மணி நேரம் சங்கக் கட்டிடத்தைச் சுற்றிப் பார்த்தோம். இதில், சங்கக் கட்டிடத்திலுள்ள ஓர் அழகிய சினிமாக் கொட்டகையில் பதினைந்து நிமிஷ நேரம் பார்த்த சினிமாக் காட்சிதான் உற்சாகமாயிருந்தது. இந்தப்பதினைந்து நிமிஷ நேரமும், அந்த மனிதன் பேசாதிருந்தது எங்களுக்கு மகிழ்ச்சியை அளித்தது. சர்வதேச சங்கம் சாதித்திருக்கிற—சாதிக்கப்போகிற—விஷயங்களை யெல்லாம் ஒரு பிரசாரப் படமாகக் காண்பித்தார்கள். படத்தின் முடிவில் நாங்கள் பார்த்த படம் என்ன என்பதே எங்களுக்கு விளங்கவில்லை.

## ஜினிவா ஏரி

ஒரு மணி நேரத்தில் போதும் என்ருகிவிட்டது. சர்வதேச சங்கத்தில் வேலை பார்த்துக்கொண்டிருந்த இந்திய நண்பர் ஒருவரோடு ஏரிக்கரைக்கு உலாவச் சென்றேன். ஜினிவா ஏரியின் அமைப்பையும் அழகையும் அதைப் பார்த்தவர்கள்தான் அனுபவிக்க முடியும். நாங்கள் ஊர் சுற்றிக் கொண்டிருந்த பொழுது இந்திய நண்பர் அன்றிரவு என்னை ஒரு புது இடத்திற்கு அழைத்துச் செல்வதாகக் கூறினார்.

இரவு 10 மணி ; ஒரு சிறு வீதியிலுள்ள சாதாரண வீடு ஒன்றிற்குச் சென்ருேம். உள்ளே நாற்பது ஐம்பது பேர்கள் உட்கார்ந்திருந்தனர். அவர்கள் பல தேசத்தார்கள் போலக் காணப்பட்டார்கள். சங்கீதம், நாட்டியம் இதையெல்லாம் பார்த்தபொழுது அது ஓர் இரவு கிளப் என்று தோன்றிற்று. ஜினிவாவில் சில சமயங்களில் 300 அல்லது 400 பத்திரிகை நிருபர்கள் தங்கியிருப்பார்களாம். இந்தப் பிரகிருதிகளெல்லாம் வழக்கமாக வரும் கிளப் இதுதானும். தவறி விழுந்தால் ஒரு பத்திரிகை நிருபர் மேல்தான் விழவேண்டும். ஜினிவாவிலிருந்து சரடு திரிக்கும் இந்த நிபுணர்களின் இரவு வாழ்க்கை வேடிக்கையாக இருந்தது.

---

# 11. வெனிஸ்

வெனிஸ் துறைமுகத்தை யடைந்ததும் எல்லோர் முகத்திலும் சந்தோஷக் குறி காணப்பட்டது; கரையை அடைந்தோமென்ற மகிழ்ச்சி, அதிலும் வெனிஸை அடைந்தோ மென்ற மகிழ்ச்சி!

கப்பலிலிருந்து சிறு படகில் இறங்கினோம். அந்தப் படகிலேயே ஊர்சுற்றிப் பார்க்கச் சென்றோம். வெனிஸ் நகரத்தில் வீதிகளே கிடையா. எல்லாம் கால்வாய்கள் தான். ஒரு வீட்டிலிருந்து எதிர்ப்புறத்திலுள்ள வீட்டிற்குச் செல்ல வேண்டுமென்றால் படகில்தான் செல்லவேண்டும். சில முக்கியமான இடங்களில் பாலங்கள் அமைத்திருக்கின்றார்கள்.

பழைய ரோமாபுரி ராஜ்யத்தின் சின்னங்கள் பல இங்குள்ளன. ஊரின் மத்தியில் பழமையான தேவாலயமும், அரண்மனையும் இருக்கின்றன. வெளிநாட்டறிஞர்கள் சிலரும், பிரபுக்கள் சிலரும் வெனிஸைத் தங்கள் வாசஸ்தலமாகக் கொண்டிருந்தனர். ராபர்ட் ப்ரௌனிங் என்ற ஆங்கிலக்கவி இங்குதான் காலமானார். அவர் வீட்டைச் சுற்றிக்காண்பித்த ஓர் இத்தாலியன் "ப்ரௌனிங் ஒரு சிறந்த அறிஞர்; ஆங்கிலேயராயினும் இத்தாலியையும் இத்தாலியர்களையும் நேசித்தார். இத்தாலியர் மீதுள்ள அன்பு அவர்

இரத்தத்தில் ஊறியிருந்தது. அந்தோனி ஈடனைப்போல அவர் இருக்கவில்லை. ஈடனின் தொப்பியைத் தூக்கினால் உள்ளே ஓர் அபிசீனியனைத்தான் காண்பீர்கள்" என்றான்.

வெனிஸில் கண்ணாடித் தொழிலும் பூவேலைத் தொழிலும் (Embroidery) அதிகம். ஒவ்வொரு தொழிற்சாலையிலும் ஆங்கிலம் தெரிந்த ஒருவனிருப்பான். ஒருமுறை ஓர் இத்தாலியனை, குறிப்பிட்ட ஒரு வியாபார நிலயம் எப்பொழுது திறக்கப்படும் என்று கேட்டேன். அதற்கு அவன் "எனக்குத் தெரியாது, நான் ஒரு கண்ணாடித் தொழிற்சாலையின் முதலாளி" என்று கூறினான். அவன் தன்னைத் தானே அறிமுகப்படுத்திக்கொண்ட நூதன முறை எனக்கு வியப்பையளித்தது. இந்த முறை உபயோகிப்பவர்களின் மதிப்பைப் பெரிதும் குறைத்து விடுகிறது.

இந்த அழகான வெனிஸ் நகரத்தில்—வீதிகளெல்லாம் ஆறுகளாக விளங்கும் இந்த அபூர்வமான வெனிஸ் நகரில்—குடிப்பதற்கு நல்ல தண்ணீர் கிடையாது. வெகு தூரத்திலிருந்து குழாய் வழியாக நல்ல ஜலம் கொண்டு வருகின்றனர்.

புதிதாக மணம் செய்யப்பெற்ற தம்பதிகள் தங்கள் 'தேன்மதி' கழிப்பதற்கு வெனிஸ் நகரத்திற்கு வருகின்றனர்.

# 12. ரோமாபுரி

வெனிஸிலிருந்து சில மணி நேரங்களில் ரோமாபுரிக்குச் செல்லலாம். பழைமையும், பெருமையும் வாய்ந்த இந் நகரம் இன்று பாஸிஸ இத்தாலியின் தலை நகராக இருக்கிறது. 'முசோலினிப் பெருமான்' இங்குதான் திருக்கோயில் கொண்டுள்ளார். ஊருக்கு நடுவேயுள்ள பழைய அரண்மனை யொன்றில் இவர் தினந்தோறும் வேலை செய்கிறார்; ஊரை யடுத்துச் சில மைல் தூரத்திலுள்ள ஒரு பங்களாவில் வசிக்கிறார்.

இவர் காரியாலயத்தைக் காவல் புரியும் ஆயுத பாணிகளான காவலாளர்கள் காலையிலும் மாலையிலும் மாற்றப்படுவார்கள். இந் நிகழ்ச்சி, மற்ற பல நாடுகளைப் போல, ஒரு சடங்காக நடக்கிறது. இதைப் பார்க்கச் சில சமயங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடுவார்கள். இம்மாதிரியான கூட்டங்களில் உற்சாகம் நிறைந்திருக்கும். **விவா டூச்சே,** (Viva Duce) விவா சியானோ (Viva Ciano) என்று ஜனங்கள் ஆரவாரம் செய்வார்கள். (விவா-ஜே என்பது.)

மார்க்கோனியும், மக்ரோனியும் பிறந்தது இந்த நாட்டில் தான். மார்க்கோனியை உங்களுக்குத் தெரியும். அவர் ஒரு காலஞ் சென்ற விஞ்ஞான நிபுணர். மக்ரோனி என்பது ஓர் உணவுப் பொருள். இத்தாலியர்கள், ஏழை முதல் பணக்காரர்கள் வரை

தினந்தோறும் விரும்பி யுண்ணும் உணவு. இதில் பல வகைகள் உண்டு. ஸ்ப்பகெட்டி (Sphegatti) என்பது ஒரு வகை.

பொதுவாக இத்தாலியர்களின் உணவு சாதாரணமானது, ஏழ்மையானது. நேப்பிள்ஸ், பிரிண்டிஸி போன்ற துறைமுகங்களில், பகட்டான உடையணிந்த போலீஸ்காரர்களையும், பசியால் இரங்கி நிற்கும் ஏழைக் குழந்தைகளையும் பார்க்கலாம். பல சமயங்களில், வயதுவந்த அழகிய சிறு பெண்கள் வீதியிற் செல்லும் அந்நியர்களின் கைகளை வலியப் பிடித்துக்கொண்டு பிச்சை கேட்பதுண்டு. ஆனால், இந்த நிலை ரோமாபுரியில் இல்லை.

இத்தாலியர்கள் ஒரு மாதிரியான ஜனங்கள்; பெரும்பாலோர் பழுப்பு நிறத்தவர். கரையோரங்களில் ஏறக்குறைய கறுப்பு நிறமுள்ள இத்தாலியர்களையும் காணலாம். அபிசீனிய வெற்றிக்குப் பின்னர் இவர்களுக்குக் கர்வம் அதிகம். ஆனால் அந்த வெற்றியின் பயனாக இவர்களின் வாழ்க்கை நிலை சிறிதளவேனும் உயரவில்லை. அபிசீனியாவிலிருந்து திரும்பிய ஓர் இத்தாலிய அதிகாரியைச் சந்தித்தேன். மீண்டும் அங்குச் செல்ல அவருக்கு விருப்பமில்லை.

முசோலினியின் அரசாங்கம் தேகப் பயிற்சியில் அதிகக் கவனம் செலுத்துகிறது. இந்தத் தேகப் பயிற்சி வெறும் உடற் பயிற்சி யல்ல—யுத்தப் பயிற்சி. இதைப் பார்க்கும்பொழுது, மக்கள் மிருகப் பிரா

யத்திற்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள் என்ற உணர்ச்சி நம்மை யறியாமலே ஏற்படுகிறது. இவர்கள் பயிற்சிபெறும் இடத்திற்கு முசோலினி ஸ்டேடியம் (Foro Mussolini) என்று பெயர். அபூர்வமான இந்தப் பெரிய ஸ்டேடியம் முழுதும் பளிங்குக் கற்களால் அமைக்கப் பெற்றிருந்ததைப் பார்த்து ஆச்சரியப் பட்டேன். ஆனால் பளிங்குக் கற்கள் இத்தாலியில் மலிவு என்று தெரிந்தபொழுது எனது ஆச்சரியம் குறைந்தது. அங்குள்ள நீந்தும் தடாகத்தை (Swimming Pool) இன்று முழுதும் பார்த்துக் கொண்டிருக்கலாம். அவ்வளவு அழகாக அமைக்கப்பட் டிருக்கிறது. இளைஞர்களைப் பட்டாளத்தில் சேர்க்கும் முயற்சிகளில் இதுவுமொன்று எனக் கூறுகின்றனர்.

ரோமாபுரிக்குச் செல்லும் ஓர் அந்நிய யாத்ரீகர், இத்தாலியப் பெண்களைக் குறித்து ஜாக்கிரதையாக இருப்பது நல்லது. ஆண்களிற் பலர் பட்டாளத்திற் சேர்ந்தமையால், மணமாகாத பெண்களின் தொகை மிகவும் அதிகமாகி விட்டது. மாலை ஆறு மணிக்கு மேல் வயா நாஷனல் (Via National) என்னும் முக்கியமான வீதியில் இப் பெண்களின் பட்டாளத்தைக் காணலாம். பாவம்! இந்தப் பெண்களிற் பலருக்கு, விபசாரத்தை விட்டால்—வாழ்க்கை நடத்த வழியில்லை.

வீதிகளில் உள்ள கபே (Cafe)களில் அந்நியர்கள் உட்கார்ந்து காபி சாப்பிடுவார்கள். சில சம

யங்களில் இப் பெண்களி லொருத்தி, தானே வலிய இவர்களிலொருவருடைய மேஜைக்கு வருவாள். அந்நியர் ஒன்றுமே கூறுமலிருந்தாலும் இவள் மதுபானம் அருந்துவாள். 'நாகரிக முறைப்'படி ஒரு மேஜையிலுள்ள ஆண்மகனிடம் தான் பில் (Bill) கொடுக்க வேண்டும். இப் பெண் சென்ற ஒரு வாரமாக அந்தக் கபேக்குக் கடன் கொடுக்கவேண்டிய திருக்கும். எல்லாவற்றையும் சேர்த்துப் பெருந் தொகைக்குப் பில் கொடுப்பார்கள். சில அந்நியர்கள் பயந்து பணத்தைக் கொடுத்து விட்டுத் தப்பி யோடுவார்கள். சிலர் சண்டை போடுவார்கள். இம் மாதிரி எல்லோர் விஷயங்களிலும் நடக்காது. பெரும்பாலும் அமெரிக்கர்கள்தான் இந்தச் சூழ்ச்சியில் அகப்படுகிருர்கள்!

சினி சிட்டா (Cine Citta) என்பது இத்தாலியிலுள்ள மிகச் சிறந்த ஸ்டூடியோ. இதனை ஹாலிவுட்டிலுள்ள நல்ல ஸ்டூடியோ ஒன்றிற்கு ஒப்பிடலாம். ரோமாபுரிக்கு அருகே இந்த அழகான ஸ்டூடியோவை அமைத்திருக்கிருர்கள். இது அரசாங்கத்தாருக்குச் சொந்தம். முசோலினியின் இரண்டு குமாரர்களில் ஒருவர் சினிமாத் தொழிலில் ஈடுபட்டிருக்கிருர். அவர்தான் இந்த இலாகாவின் தலைவர்.

இத்தாலியில் சினிமாத் தொழில் தனிப்பட்டவர்களின் கைகளில்தான் இருக்கிறது. அவர்கட்கு வசதி செய்வதற்காகவே இந்த ஸ்டூடியோவை அரசாங்கத்தார் அமைத்திருக்கிருர்கள். இதில் ஏழு

ஸ்டேஜ்களுக்கு மேல் இருக்கின்றன. எல்லாம் புதிய சாமான்கள். இவ்வளவு பெரிய அழகான ஸ்டூடியோவை மிகச்சுத்தமாக வைத்திருக்கிறார்கள். ஒலிப்பரீட்சைக்காக இவர்கள் செய்திருக்கும் ஏற்பாடுகள் மிக நன்றாகவும் வெற்றிகரமாகவும் இருக்கின்றன. வெனிஸில் கண்ணாடித் தொழில் அதிகம். அங்குக் கண்ணாடியிலிருந்து மிகமெல்லிய கயிறு செய்கிறார்கள். இந்தக் கண்ணாடிக் கயிறுகள் பின்னப்பட் டிருக்கின்றன. ஸ்டூடியோக்களில் ஒரு குறிப்பிட்ட இட முழுதும் அங்குள்ள சுவர்களிலோ அல்லது அட்டைகளிலோ இந்தப் பின்னிய கண்ணாடிக் கயிறுகளை அமைத்து விடுகின்றனர்.

இத்தாலிய அரசாங்கத்தார் சினிமா மூலம் பிரசாரம் செய்வதன் அவசியத்தை நன்குணர்ந்திருக்கின்றனர். இதற்காக லூச்சே (Luce) என்னும் ஸ்தாபனத்தை அமைத்துள்ளார்கள். இத்தாலியில் செய்திப் படங்களையும் டாக்குமெண்டரி படங்களையும் தயாரிப்பது இவர்கள் வேலை. இவர்கள் தயாரிப்பது பெரும்பாலும் பிரசாரப் படங்கள். சென்ற பத்து வருடங்களில் இத்தாலியில் நடைபெற்ற ஒவ்வொரு முக்கியமான சம்பவங்களையும் நாம் சினிமாப் படமாகப் பார்க்கலாம்.

மறைந்துபோன ரோமாபுரி ஏகாதிபத்தியத்தின் பழைய சரித்திரச் சின்னமான கட்டிடங்கள் பல ரோமாபுரியை அலங்கரிக்கின்றன. இவைகளெல்லாம் ரோமர்களின் நாகரிகத்தை நினைப்பூட்டு

கின்றன. யாத்ரீகர்களின் கண்கட்கு இச் சின்னங்கள் சிறந்த விருந்துகளாகும். இவைகளைக் கண்டு களிக்க வருடந்தோறும் ஆயிரக்கணக்கான யாத்ரீகர்கள் ரோமாபுரிக்குச் செல்கின்றனர்.

---

# 13. தென்னுப்பிரிக்காவில்

லண்டனிலுள்ள கப்பல் கம்பெனி யொன்றில் தென்னுப்பிரிக்கா செல்லுவதற்கு டிக்கட் கேட்டேன். டிக்கட் கொடுத்தார்கள். ஆனால் கப்பலில் ஏற்ற மறுத்து விட்டார்கள். தென்னுப்பிரிக்கா அரசாங்கத்தாரிடமிருந்து அனுமதி கிடைத்தால்தான் கப்பலில் ஏற அனுமதிப்போம் என்ருர்கள். இம்பீரியல் ஏர் வேஸூக்குச் சென்றேன். அவர்களும் இதே கதையைத்தான் கூறினுர்கள்.

பிறகு லண்டனிலுள்ள தென்னுப்பிரிக்கா ஹைகமிஷனர் காரியாலயத்துக்குச் சென்றேன். அங்கிருந்த அதிகாரி யொருவர் எனது நிலையைக் குறித்துப் பரிதாபப்பட்டார். "நீங்கள் ஒரு பிரிட்டிஷ் இந்தியப் பிரஜை. சட்டப்படி நீங்கள் தென்னுப்பிரிக்கா செல்வதைத் தடைசெய்ய முடியாது. ஆனால் நடைமுறையில் தடை செய்கிருர்கள். தென்னுப்பிரிக்கா அரசாங்கத்தின் இந்த விபரீதமான போக்கை என்னல் அறிந்துகொள்ள இயலவில்லை" என்ருர். "நான் எப்படியும் தென்னுப்பிரிக்கா செல்ல வேண்டும். ஒரு வேளை என்னைத் தென்னுப்பிரிக்காவில் இறங்க அனுமதிக்காவிட்டால், அங்கிருந்து லண்டனுக்குத் திரும்பி வருவதற்குள்ள கப்பற் கட்டணத்தை டிபாசிட்டாகக் கொடுத்து விடுகிறேன். எனக்குக் கப்பலில் இடம் கிடைக்கும்படி செய்யவேண்டும்" என்றேன். சில

நிமிஷநேரம் கப்பல் கம்பெனிக்காரர்களோடு டெலிபோனில் பேசினார். அவருடைய புன்னகையிலிருந்து காரியம் வெற்றி என்பதை யறிந்தேன்.

1938-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 10-ந்தேதி சவுத்தாம்டன் துறைமுகத்திலிருந்து வின்ட்ஸர்காஸில் எனும் கப்பலில் தென்னாப்பிரிக்காவுக்குப் புறப்பட்டேன். கப்பல் பெரிய கப்பல். சுமார் இருபதாயிரம் டன். இரண்டாவது வகுப்பில் சுமார் 60 பிரயாணிகள். பெரும்பாலோர் இங்கிலீஷ்காரர்கள். மற்றவர்கள் யூதர்கள். எல்லோரும் நிறத் திமிர் கொண்டவர்கள். இவர்களிடையே பிரயாணம் செய்வது மிகவும் சங்கடமாக இருந்தது. கப்பல் புறப்பட்ட முதலாவது இரவிலிருந்தே நிறத் துவேஷம் தலைகாட்ட ஆரம்பித்து விட்டது. இரண்டாவது வகுப்புப் பிரயாணிகள் சாப்பிடுமிடத்தில் சுமார் 200 பேர் உட்காரலாம். ஒரே ஹாலில் இரண்டு பிரிவாகப் பிரித்திருக்கிறார்கள். ஒரு பிரிவில் என்னைத் தனியாக உட்கார வைத்தார்கள். மற்றப் பிரயாணிகள் எல்லோரும் மற்றொரு பிரிவில். இந்த அவமானத்தை என்னால் சகிக்க முடியவில்லை. தென்னாப்பிரிக்காவை அடைவதற்கு முன்னமேயே கஷ்டங்களும் அவமானங்களும் நேரத் தொடங்கி விட்டன.

நான்காவது நாள் கப்பல் மடீரா எனும் தீவை யடைந்தது. புன்ஷல் என்பது துறைமுகம். இது போர்ச்சுகீஸியர்களுக்குச் சொந்தமானது. அழகான மலை, அதை அடைய ஒரு மலைரயில். இதுதான்

வருடந்தோறும் ஆயிரக்கணக்கான யாத்ரீகர்களை இங்குக் கொண்டுவருகிறது. எனது கப்பலில் பிரயாணம் செய்த ஒரு ஸ்காட்லாந்து என்ஜினியர் என்னுடன் ஊர்சுற்ற வந்தார். இவர் தென்னாப்பிரிக்காவுக்குச் செல்லுவது இதுதான் முதல் முறையாம்; எனவே, அவருக்கு நிறத் துவேஷம் அப்பொழுது வளரவில்லை.

ஆகஸ்டு 24-ந் தேதி காலை 6 மணிக்குக் கப்பல் கேப்டவுன் துறைமுகத்தை யடைந்தது. கப்பலை விட்டு இறங்குவதற்குத் துடித்துக் கொண்டிருந்தேன். ஒருவேளை என்னை இறங்க அநுமதிக்கா விட்டால், லண்டனுக்குத் திரும்பிச் செல்லவேண்டுமே என்று எண்ணியபொழுது பயங்கரமாக இருந்தது. 7 மணிக்கு இமிகிரேஷன் அதிகாரிகள் கப்பலுக்கு வந்தனர். நல்ல வேளையாக தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்திய ஏஜண்ட்ஜெனரல் ஸர். ராமராவ் எனது வருகையைப் பற்றி இமிகிரேஷன் அதிகாரிகளுக்குத் தெரிவித்திருந்தார். என்னிடம் 25 பவுன், டிபாசிட் வாங்கிக்கொண்டு, அந்நாட்டில் ஒரு மாதம் தங்குவதற்கு அநுமதி கொடுத்தார்கள். எனது சாமான்களை யெல்லாம் கப்பலிலேயே டர்பனுக்கு அனுப்பிவிட்டு, காமிராவுடன் கரையைச் சேர்ந்தேன்.

ரயில் தயாராக காத்துக்கொண்டு நின்றது. ஆனால் இந்தியர்கள் மற்றப் பிரயாணிகளோடு ஒன்ருகப் பிரயாணம் செய்யமுடியாது. 'ரிஸர்வ்' என்ற தனி கம்பார்ட்மெண்டில்தான் பிரயாணம் செய்ய

வேண்டும். தென்னுப்பிரிக்காவில் ரயில் வண்டிகள் மிகவும் மெதுவாகச் செல்லும். மீட்டர்கேஜ்தான். அமெரிக்காவில் மணிக்கு 100 மைல் வேகம் செல்லும் ரயிலில் பிரயாணம் செய்துவிட்டு, தென்னுப்பிரிக்காவில் பிரயாணம் செய்வது ஒருமாதிரியாக இருக்கும். மெதுவாகச் செல்லும் ரயிலில், அவமானங்களைச் சகித்துக்கொண்டு, நாட்கணக்காகப் பிரயாணம் செய்ய நான் விரும்பவில்லை. எனவே ஆகாயவிமான நிலயத்திற்குச் சென்றேன். எட்டரை மணிக்குப் புறப்பட்ட விமானத்தில் எனக்கு இடம் கிடைத்தது. கேப்டவுனிலிருந்து டர்பன் சுமார் 1200 மைல்.

ஆகாயவிமானப் போக்குவரத்தை ரயில்வே கம்பெனியாரே நடத்துகிருர்கள். போதுமான வருமான மில்லாததால் இந்தியர்களை விமானத்தில் பிரயாணம் செய்ய அநுமதிக்கிருர்கள். கேப்டவுனிலிருந்து இரண்டரை மணி நேரத்தில் எலிஸெபத் துறைமுகம் என்ற இடத்தை யடைந்தோம். என்னுடன் இரண்டு பேர் பிரயாணம் செய்தனர். எலிஸெபத் துறைமுகத்திலிருந்து கிழக்கு லண்டன் செல்லும் வரையிலும், 14 பேர் உட்காரக்கூடிய விமானத்தில் தனியாகப் பிரயாணம் செய்தேன். கிழக்கு லண்டனில் ஐந்தாறு பிரயாணிகள் வந்தனர். அதில் ஒருவர் என்னைப் பார்த்து, "நீங்கள்தான் இந்தியாவின் ஏஜண்ட் ஜெனரலா?" என்ருர். ஏஜண்ட் ஜெனரல்தான் விமானத்தில் பிரயாணம் செய்யமுடியும் என்பது அவர் கருத்துப்போலும்!

மாலை 4 மணிக்கு டர்பனைச் சேர்ந்தேன். பிரபல இந்தியத் தலைவர்களும், என்னுடைய நண்பர் டாக்டர் லாஸரஸும் மலர்ந்த முகத்தோடு வரவேற்றுர்கள். அங்கிருந்து எல்லோரும் நேராக டாக்டர் டாடுவின் வீட்டிற்குச் சென்று தேனீர் அருந்திஞேம். டாக்டர் டாடு சீமையில் படித்த முஸ்லிம் டாக்டர். இளவயது, நல்ல தோற்றம். சமதர்மக் கொள்கையுடைய ஒரு தேசீயவாதி. சத்தியாக்கிரக இயக்கத்தைத் தொடங்குவதற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார்.

டாக்டர் லாஸரஸ் இந்தியக் கிறிஸ்தவர், தமிழர். இவருடைய தாய் தந்தையர்கள், காந்தியடிகள் ஆரம்பித்த சத்தியாக்கிரகத்திலே சிறை சென்றவர்கள். இவருடைய வீடுதான், சத்தியாக்கிரகிகளின் தலைமைக் காரியாலயமாயிருந்தது. தென்னுப்பிரிக்காவிலுள்ள இரண்டரை லட்சம் இந்தியர்களில் இவரும் இவர் மனைவியுந்தான் அமெரிக்கா சென்று படித்துத் திரும்பியவர்கள். டாக்டர் லாஸரஸ் ஏல் யூனிவர்சிட்டியில் படித்தவர். இவர் சாஸ்திரி காலேஜில் ஒரு புரொபசராயிருக்கிருர்.

சாஸ்திரி காலேஜ் டர்பனிலுள்ள ஒரு சிறந்த ஸ்தாபனம். மகாகனம் சாஸ்திரியார் தென்னுப்பிரிக்காவில் ஏஜண்ட்ஜெனரலாக இருந்தபொழுது பல நல்ல காரியங்கள் செய்திருக்கிருர். அதிலே உருப்படியான காரியங்களுள் இந்த சாஸ்திரி காலேஜும் ஒன்று. இந்த காலேஜ் ஆரம்பிப்பதற்குமுன் இந்திய மாணவர்களின் உயர்தரப் படிப்பிற்கே வழியில்லாம

விருந்தது. சாஸ்திரியார், அங்குள்ள இந்திய வியாபாரிகளிடம் சுமார் $2\frac{1}{2}$ லட்ச ரூபாய் வசூல் செய்து சாஸ்திரி காலேஜ் கட்டிடங்களைப் பூர்த்தி செய்தார். பிறகு அரசாங்கத்தாருக்கு, இக்காலேஜை நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதாம். சாஸ்திரி காலேஜில் சுமார் 350 மாணவர்கள் பயில்கின்றார்கள். 16 ஆசிரியர்கள். இவர்களுள் 8 பேர் ஐரோப்பியர்கள். 8 பேர் இந்தியர்கள். காலேஜ் கட்டிடத்தில் இந்திய ஆசிரியர்களுக்குத் தனியறை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஐரோப்பிய ஆசிரியர்களுக்கும் இந்திய ஆசிரியர்களுக்கும் தகுதி ஒன்றாய் இருந்தபோதிலும், சம்பளத்தில் வித்தியாசம்.

ஒருநாள் மாலையில் சாஸ்திரி காலேஜ் மாணவர் சங்கத்தாரின் தேனீர்விருந்தில் நான் கலந்துகொண்டேன். அப்பொழுது மாணவர்கள் இந்தியாவைப்பற்றி விநோதமான கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தனர். இந்த மாணவர்கள் இரண்டாவது, மூன்றாவது தலைமுறைகளைச் சேர்ந்தவர்கள். இவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் இந்தியாவுக்கே வராதவர்கள். ஒரு மாணவன் 'சந்நி' என்றால் என்னவென்று கேட்டான். கிப்ளிங் புத்தகத்தில் படித்தானாம். சந்நியாசியைப் பற்றி இந்தியமாணவனொருவன் கிப்ளிங் மூலமாகத் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

டர்பன் நகரத்தில்மட்டும் சுமார் 80,000 இந்தியர்கள் இருக்கிறார்கள். இவர்களிற் பெரும்பாலோர் தமிழர்கள். டர்பன்நகரத்தில் பெரிய இந்திய மார்க்

கெட் ஒன்று இருக்கிறது. காய்கறி, பழம், புஷ்பம் முதலியவைகள் விற்கிருர்கள். இங்கு வியாபாரம் செய்யும் சகோதரிகள் தமிழ் பேசுவது மிகவும் வேடிக்கையாக இருக்கும். இவர்கள் பேசுவது 1860-ம் வருஷத்துத் தமிழ். இவர்கள் பேசும் ஆங்கிலம் தமிழைவிட நன்ருக இருக்கிறது.

காந்தியடிகள் ஆரம்பித்த பீனிக்ஸ் ஸெட்டில் மெண்டு, டர்பனிலிருந்து சுமார் 10 மைல் தூரத்திலிருக்கிறது. காந்தியடிகளின் புதல்வரான ஸ்ரீ மணிலால் காந்தியும், அவருடைய நல்ல மனைவியான ஸ்ரீமதி சுசீலா தேவியும், அவர்களுடைய இரு குழந்தைகளும் அங்கு வசிக்கிருர்கள். காந்திஜீ ஆரம்பித்த இந்தியன் ஒபீனியன் என்னும் பத்திரிகை இன்னும் நடைபெற்று வருகிறது. ஸ்ரீமதி சுசீலா தேவி விருந்தினர்களை மிக அன்பாக உபசரிக்கிருர். நன்ருக ஆங்கிலம் பேசுகிருர். அவர் தமது புதல்வியுடன் சிவக்கிராமத்தில் இரண்டு மாதம் தங்கி யிருந்தாராம். அதற்காக மகாத்மாஜி 60 ரூபாய் வசூல் செய்து விட்டாராம்! என்ன மனுஷ்யன்! மருமகள், பேத்தி என்று கொஞ்சமாவது கவனித்திருக்க வேண்டாமா?

டர்பனிலிருந்து, பீட்டர் மாரிட்ஸ்பர்க், நியூ காஸில், சார்ல்ஸ் டவுன், வால்கர்ஸ்ட் முதலியவைகளின் வழியாக ஜோகன்னஸ்பர்க் சென்றேன். காந்தியடிகளின் சத்தியாக்கிரகம் சம்பந்தமான இடங்கள் ஒவ்வொன்றையும் படம் பிடித்தேன். எந்த வீட்டில் பார்த்தாலும் காந்தியடிகள் படந்தான்.

'காந்தி' என்பது மந்திரச் சொல். இந்த வார்த்தையை எந்த இந்தியனிடமாவது உச்சரியுங்கள்; உடனே அவன் முகத்தில் ஒரு பிரகாசத்தைக் காண்பீர்கள். அவன் உள்ளத்திலே பொங்கும் உணர்ச்சியை, முகத்தோற்றத்திலே காண்பீர்கள்.

சத்தியாக்கிரக இயக்கம் ஒரு புராணம்போல ஆகிவிட்டது. பெரியவர்கள் தங்கள் குழந்தைகட்குக் கதையைப் போலக் கூறுகிறார்கள். ஜோகன்னஸ்பர்க் சென்றபொழுது, முதன்முதற் சிறை சென்ற வீரத் தமிழ் அன்னைகள் சிலரைத் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது. பி. கே. நாயுடுவின் மனைவி, தம்பி நாயுடுவின் மனைவி முதலியோரைச் சந்தித்தேன். அந்தக் கண்காணாத தேசத்திலே, காந்தியடிகளின் சத்தியாக்கிரகப் போரில் பலியான இளந் தமிழர்கள் 'வள்ளியம்மையையும் நாகப்பனையும்' யார் மறக்க முடியும்? அவர்களின் ஞாபகார்த்த இடங்கட்குச் சென்று எனது வணக்கத்தைச் செலுத்தினேன்.

பிரிட்டோரியா சென்றபொழுது பிரசிடெண்ட் குருகர் வீட்டைப் படம் பிடித்தேன். அப்பொழுது காந்தியடிகளை ஒரு போலீஸ்காரன் அடித்து அவமானப்படுத்திய காட்சிகளெல்லாம் மனக் கண்களிலே தோன்றின.

தென்னாப்பிரிக்காவில் தங்கிய சுமார் மூன்று வாரங்களில் தமிழர்களிடையே தான் அதிகம் பழகினேன். சில தமிழ்ப் பெண்கள் பாரதி பாடல் சில

வற்றைப் பாடியபொழுது என் உள்ளம் குளிர்ந்தது. தமிழர்கள் தமிழை மறக்கவில்லை; ஆனால் வளர்க்கவு மில்லை. பெரும்பாலான தமிழர்கள் ஆங்கிலத்திலே தான் நினைக்கிறார்கள். பிறகு அதைத் தமிழிலே கூறுகிறார்கள்.

தமிழர்களிற் பெரும்பாலோர் தோட்ட வேலை செய்பவர்கள். வியாபாரம் குஜராத்திகளிடமும், முஸ் லிம்களிடமும் தான் இருக்கிறது. இந்தியர்களுக்குத் தென்னாப்பிரிக்காவில் தொந்தரவு உண்டாவதற்குக் காரணம் இந்த வியாபாரிகள்தான். இந்தியர்களின் உரிமைப் போராட்டங்களிலே கலந்து அதிகமாகத் தியாகம் செய்தது தமிழர்கள்; அதன் பயனை அநுப விப்பது காந்தி குல்லா அணியும் குஜராத்திகளும், மற்ற இந்தியர்களும்! காந்தியடிகள் ஆரம்பித்த சத்தி யாக்கிரகத்திலே கடைசிவரை போராடி, எல்லாவற் றையும் தியாகம் செய்தவர்களிற் பெரும்பாலோர் தமிழர்கள்தான்.

தமிழர்களின் வாழ்க்கை நிலை உயரவில்லை. வயிறு நிறைய உணவு கிடைக்கிறதென்ற திருப்தியைத் தவிர வேறொன்றுமில்லை. உரிமை என்ற பேச்சே கிடை யாது.

கல்யாணம் முதலிய விசேஷங்கட்கு மிக அதிக மாகச் செலவு செய்கின்றனர். கடன் வாங்கிக் கல் யாணம் செய்து கெட்ட குடும்பங்கள் எத்தனையோ இருக்கின்றன.

தமிழர்களுடைய பெயர்களும் வரவர மாறிக் கொண்டே வருகின்றன. பட்டப் பெயர் மிக அதி கம். டிக், டேடி என்றெல்லாம் கூப்பிடுவார்கள். காந்தியடிகள் தமது புத்தகத்தில் எழுதியுள்ள மூன் லைட் குப்புசாமியைப் பார்த்தேன். தமிழிலே ஆறு முகம் என்ற பெயரை ஹாரி மார்க்கன் என்றும், மங்கமாரி என்பதை மாண்கோமரி என்றும் வைத்துக் கொள்ளுகிறார்கள்.

தென்னாப்பிரிக்கா பொதுவாக ஒரு நல்ல நாடு. நிறத்துவேஷமின்றி, சம உரிமை கிடைத்தால் இந்தி யர்கள் அந்நாட்டில் சௌகரியமாக வாழலாம். டிரான்ஸ்வால் பொன் விளையும் பூமி. ஜோகன்னஸ்பர்க் நகரம் மிகவும் நாகரிகமானது. நியூயார்க் நகரத்தின் ஒரு பகுதிபோலத் தோன்றுகிறது. பிரிட்டோரியா வும் ஒரு அழகான நகரம். டர்பன் மிகவும் சுத்த மான நகரங்களில் ஒன்று.

அந்நாட்டின் நீக்ரோக்கள் மிகவும் பிற்போக் கானவர்கள். இந்தியர்கள் வீட்டிலும், வெள்ளையர் கள் வீட்டிலும் வேலை பார்க்கிறார்கள். அவர்கள் வாங்கும் சம்பளம் மிக மிகக் குறைவு. நீக்ரோக் களை முன்னுக்கு வர விடாமல் செய்வதில் இந்தியர் களும், வெள்ளையர்களும் ஒரே மாதிரிதான்.

நிறத்துவேஷத்தினால் இந்தியர்கள் படும் கஷ் டங்கள் மிக அதிகம். அங்குள்ள இந்தியர்கட்கு இவையெல்லாம் பழக்கமாகிவிட்டது. இந்தியர்

கள் லிப்டுகளில் செல்ல முடியாது. ஒரு முறை ஏஜண்ட் ஜெனரல் ரஸா அலி லிப்டில் ஏறியபொழுது அங்கிருந்த நீக்ரோ வேலைக்காரன் பிடித்துத் தள்ளி விட்டான்.

டர்பனில் சில வீதிகளில் இந்தியர்கள் இன்றும் நடந்து செல்ல முடியாது. சினிமா, நாடகம் முதலியவைகளில் இந்தியர்களை அனுமதிக்க மாட்டார்கள். டிராம், பஸ் முதலியவைகளில் இந்தியர் கட்கு, மேல்தட்டில் கடைசி மூன்று சீட்டுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அநேக இடங்களில் இந்தியன் பார் தனியாக வைத்திருக்கிறார்கள்.

இந்தியர்களை ஆங்கிலேயர்கள் ஹோட்ட லுக்கோ, அல்லது சாப்பிடுமிடங்களுக்கோ அனு மதிக்க மாட்டார்கள். ஜோகன்னஸ்பர்க்கில் ஐரோப் பிய ரல்லாதார்கட்குத் தபாலாபீஸ்கூடத் தனியாக இருக்கிறது. பாங்குகளில் ஐரோப்பிய ரல்லாதார் கட்குத் தனி கௌண்டர்கள் வைத்திருக்கிறார்கள். இந்தியர்கள் தனி இடங்களில் (சேரிகள் மாதிரி) தான் வசிக்க வேண்டும். டிரான்ஸ்வாலில், இந்தியர்களுக் குச் சொத்துக்கள் வாங்க உரிமை யில்லை.

ஜோகன்னஸ்பர்க்கில் தங்கி இருந்தபொழுது யுத்தம் ஆரம்பித்த செய்தி கிடைத்தது. அன்று ஜோகன்னஸ்பர்க்கில் ஒரே குழப்பம். அங்கிருந்த ஜெர்மனியர்கள் போர்ச்சுகீஸ் ஆட்சியிலுள்ள லோரன்ஸோ மார்க்கீஸ் என்ற நகரத்திற்குச் சென்று

விட்டனர். வெறிபிடித்த சில ஆங்கில இளைஞர்களும், யூத இளைஞர்களும், ஜெர்மன் கிளப்புகளையும், ஜெர்மன் சாமான்களையும் நாசமாக்கக் கூட்டமாகக் கிளம்பினர். அந்தக் கூட்டங்களைக் கலைப்பதற்கு போலீசார் தடியடிப் பிரயோகம் செய்யவில்லை. கண்ணீர்ப் புகை உபயோகித்தனர். ஒரு முறை காரில் சென்று இதன் மத்தியில் அகப்பட்டுக் கொண்டேன். கண்ணீர்ப் புகை கண்களுக்குள் போய் விட்டதால் மோட்டாரை நிறுத்த வேண்டியதாயிற்று. சுமார் மூன்று நிமிஷம் கண்களிலிருந்து ஜலம் வந்தது. கண்ணெல்லாம் ஒரே எரிச்சல். ஆனால் பரிமளமான வாசனை. இதுதான் கண்ணீர்ப் புகை. இந்தத் தொந்தரவுகளை யெல்லாம் விட்டுவிட்டு விமானத்தில் டர்பனைச் சேர்ந்தேன். மறுபடியும் கப்பல் கம்பெனியில் தகராறு. இந்தியர்களுக்கு முதலாவது வகுப்பு டிக்கட் கொடுப்பதில்லை யென்று எல்லாக் கப்பல் கம்பெனிக்காரர்களும் (ஜப்பானியர் உட்படக்) கூறி விட்டனர். கடைசியாக ஏஜண்ட் ஜெனரலின் உதவியால் டிக்கட் கிடைத்தது.

அந்தத் துரதிருஷ்டமான தென்னாப்பிரிக்காவைப் பற்றி நினைக்கும்பொழுதெல்லாம், 'நமது பாரத தேசிகள் அங்குச் சென்று படும்பாடுகள்' தான் நினைவுக்கு வருகின்றன.

5959
21 APR 1982